www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16-31 ஜனவரி '90
5-5
விலை ரூ.2.

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு



## கோர்பசேவின் முடிவு நெருங்குகிறது!

www.padippakam.com

# போலீசின் அவதூறு - அடக்குமுறைகளை எதிர்த்து பிரச்சார இயக்கம்

தஞ்சை, திருச்சியில் ம.க.இ.க.மீது ஏவிவிடப்பட்ட போலீசு அடக்குமுறை மற்றும் பத்திரிக்கைகளின் அவதூறு பிரச்சாரத்திற்கு எதிராக தஞ்சை ஆட்டுமந்தைத் தெருவிலும், திலீபன் திடலிலும் கண்டனப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. மாலைமலர், மாலைமுரசு, தினமலர் போன்ற பத்திரிக்கைகள் புரட்சிகர இயக்கங்களுக்கு எதிராக நடத்தும் பொய்ப்பிரச்சாரத்தை துரைமாணிக்கம் (வி.வி.மு) அம்பலப்படுத்தினார். மோப்பநாயை வேண்டுமென்றே கொண்டு வந்து ம.க.இ.க. தோழர்களின் வீட்டில் ஏற்றி பொய்வழக்கு போடச் சதித் திட்டம் தீட்டிய போலீசை காளியப்பன் (ம.க.இ.க) தோலுரித்தார். திருச்சியில் போலீசு நடத்திய அடக்குமுறை வெறியாட்டத்தை முத்து (ம.க.இ.க. திருச்சி) கோபாவேசத்துடன் விவரித்தார். கைது செய்யப்பட்ட தோழர்கள் மீது நடத்தப்பட்ட அடக்குமுறைகளையும், போலீசின் விசாரணை நாடகத்தைத் தோழர்கள் துணிவுடனும், உறுதியுடனும் எதிர்கொண்ட முறையையும் ம.க.இ.க.வின் மாநிலச் செயலர் மருதையன் விளக்கினார்.

இத்தகைய அடக்குமுறைகள் புரட்சிகர இயக்கங்களுக்கு மட்டுமே வருபவை அல்ல; ஜனநாயக உணர்வும், நேர்மையுணர்வும் கொண்ட குடிமக்கள் அனைவர்மீதும் அன்றாடம் தொடுக்கப்படுபவையே என்பதை பேச்சாளர்கள் அனைவரும் வலியுறுத்தினர்.

## கூட்டங்களுக்குத் தடை!

கடந்த பாராளுமன்றத் தேர்தல் முடிந்த நாளிலிருந்து இன்றுவரை திருச்சி நகரில் ம.க.இ.க.வின் பொதுக்கூட்டங்களுக்கு மட்டும் அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. பொதுக்கூட்டங்கள் அனுமதிக்கப்பட்டால் எங்கே தன்னுடைய உத்தம வேடத்தை திரைக் கிழித்து விடுவார்களோ என்று நடுங்குகிறார் திருச்சி நகர டி.எஸ்.பி. பொதுக்கூட்டங்கள் தடை செய்யப்பட்டால் என்ன, நகரின் ஒவ்வொரு மூலையிலும், ஒவ்வொரு வீதி முனையிலும் ம.க.இ.க. தோழர்கள் தெருமுனைக் கூட்டங்கள் வாயிலாக தங்கள் பிரச்சாரத்தைத் தொடர்ந்து கொண்டு செல்கின்றனர்.

திருச்சியில் மட்டுமல்ல, வி.வி.மு. திருவையாறு ஒன்றியத்திலும் பொதுக்கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. தஞ்சையிலும் கூட்டம் நடப்பதற்கு ஒரு சில மணி நேரங்கள் முன்புதான் அனுமதி தரப்பட்டிருக்கிறது.

வானொலியிலும், தொலைக்காட்சியிலும் தன்னாட்சி - ஜனநாயகம் என்றெல்லாம் தம்பட்டம் அடிக்கும் தேசிய முன்னணியின் 'ஒரு தூணான' தி.மு.க.வின் ஆட்சியில் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் ஜனநாயகம் பொங்கி வழியும் லட்சணம் இதுதான்!

புரட்சிகர இயக்கங்களை ஒடுக்கும் நோக்குடன் திருச்சி நேரு சிலை உடைப்பு, தஞ்சை நினைவுத் தூண் தகர்ப்பு ஆகிய சதி நடவடிக்கையில் இறங்கிய போலீசு கும்பலை அம்பலப்படுத்தியும், தோழர்களைக் கைது செய்து அவதூறு பிரச்சாரம் செய்ததை எதிர்த்தும் ஊற்றங்கரை புதிய ஜனநாயக வாசகர் வட்டம் பிரசுரம், சுவரொட்டி, தெருமுனைக் கூட்டங்கள் மூலம் கிராமப்புறங்களில் விரிவாக பிரச்சாரத்தை முன்னெடுத்துச் சென்றது. ஊற்றங்கரையிலும் மத்தூர், சாமல்பட்டி, போச்சம்பள்ளி, சிங்காரப் பேட்டை முதலான கிராமங்களிலும் பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

சாமல்பட்டியில் தெருமுனைப் பிரச்சாரம் செய்தபோது காங்கிரஸ் பிரமுகர் ஒருவர், "போலீசும் காங்கிரசும் கூட்டுச் சேர்ந்து குண்டு வைத்ததை உன்னால் நிரூபிக்க முடியுமா?" என்று மிரட்டினார். தோழர்கள் போலீசு - காங்கிரசு கும்பலின் கூட்டுச் சதி நடவடிக்கையை மிக விரிவாக தோலுரித்துக் காட்டியதும் அந்தப் பிரமுகர் அசடு வழிந்தார். திரண்டிருந்த மக்கள் இதை உற்சாகத்துடன் வரவேற்றனர். சிங்காரப் பேட்டையில் மக்கள் நமது பிரச்சாரத்துக்கு ஆதரவளித்து நிதியுதவியும் செய்தனர்.

22.12.89 அன்று ஊற்றங்கரையில் போலீசின் சதி - அவதூறுகளை எதிர்த்து பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சுப்பிரமணி, இந்திரஜித் மற்றும் கல்லை வட்ட விவசாயிகள் முன்னணி அமைப்பாளர் தோழர் கதிர்வேலன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். பகுதிவாழ் மக்கள் திரளாக கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை வரவேற்றனர்.

★ ☆ ★

திருச்சி - தஞ்சை வெடிகுண்டுச் சம்பவங்களைக் காரணங்காட்டி புரட்சிகர இயக்கத் தோழர்களைக் கைது - சித்திரவதை செய்து, அவதூறு பிரச்சாரம் செய்த போலீசு கும்பலை எதிர்த்து திருப்பத்தூர் புதிய கலாச்சாரம் வாசகர் வட்டம் 23.12.89 அன்று பொதுக் கூட்டத்தை நடத்தியது. தோழர் சிவானந்தன் தலைமையில் தோழர்கள் தமிழ்வாணன், இந்திர்ஜித் ஆகியோர் சிறப்புரையாற்றினர். பாசிச எதிர்ப்புப் போராளி தோழர் டிமிட்ரோவ் மீது அன்று ஜெர்மானிய நாஜிகள் தொடுத்த பொய் வழக்கிலிருந்து இன்றைய சிலை - சின்னம் தகர்ப்பு நடவடிக்கை வரை அனைத்து நாட்டு போலீசு கும்பல்களும் மேற்கொள்ளும் சதிகளை அம்பலப்படுத்தி தோழர்கள் உரையாற்றியது மிகச் சிறப்பாக அமைந்தது. இடையிடையே புரட்சிகர பாடல்கள் தோழர்களால் இசைக்கப்பட்டன. நூற்றுக்கும் மேற்பட்ட பகுதிவாழ் மக்கள் இக்கூட்டத்தில் திரண்டு உற்சாகத்துடன் வரவேற்றனர்.



## வெண்மணித் தியாகிகளின் நினைவாக...

கல்லை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணியின் சார்பில் டிசம்பர் 25 அன்று வரகூர் என்ற கிராமத்தில் வெண்மணி நினைவுநாள் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. வி.வி.மு. அமைப்பின் சின்னம் பொறித்த செங்கொடியை விண்ணதிரும் முழக்கங்களுக்கு இடையே அமைப்பாளர் தோழர் கதிர்வேலன் ஏற்றிவைத்தார்.

அதன்பின் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு தோழர் நாகராசன் தலைமையேற்று வி.வி.மு. கொள்கைகளை விளக்கிப் பேசினார். தோழர் கதிர்வேலன் நிலப்பிரபுத்துவ கொடுமைக்கு இரத்த சாட்சியான வெண்மணி சம்பவத்தை தொகுத்துரைத்தார். வெண்மணி நாள் குறுரையை தோழர்கள் ஏற்றனர். பொதுக்கூட்டத்தைத் தொடர்ந்து புரட்சிகர கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. 500க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு ஆதரவளித்தனர்.

— விவசாயிகள் விடுதலை முன்னணி
கல்லை வட்டம்

டிசம்பர் 25 வெண்மணி தியாகிகள் நினைவு நாளன்று அடக்குமுறை எதிர்ப்புப் பொதுக்கூட்டமும் ஊர்வலமும் ஏரிப்புறக்கரை கிராமத்தில் நடத்தப்பட்டது. சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்ட தஞ்சை ம.க.இ.க. செயலர் தோழர் காளியப்பன் வெண்மணி நாளின் முக்கியத்துவத்தை விளக்கினார். "வெண்மணி படுகொலைக்குக் காரணம் கூலிஉயர்வு கேட்டது அல்ல; சங்கம் வைத்ததுதான்; உரிமைக்குரல் எழுப்பியதுதான்" என்பதைத் தெளிவுபடுத்தினார்.

அந்த வட்டாரத்தைச் சேர்ந்த போலிக் கம்யூனிஸ்டுகட்சி மற்றும் சங்கங்களைச் சேர்ந்த அணிகள் ஏராளமானோர் விலகி வி.வி.மு.வில் இணைந்தனர். பொதுக்கூட்டமும், ஊர்வலமும் மக்களிடையே உற்சாகத்தையும் நம்பிக்கையையும் தோற்றுவிப்பதாக அமைந்தது.

விவசாயிகள் விடுதலை முன்னணி
பட்டுக்கோட்டை ஒன்றியம்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

5

16-31 ஜனவரி '90

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# ஈழமக்களின் உரிமைப்போர் தொடரவேண்டும்!

ஈழத்தில் இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்கிற முழுமையான, தெளிவான விவரம் யாருக்குமே தெரியவில்லை. இந்திய, இலங்கை உளவுப்படைகளுக்கோ, போரில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ் தேசிய இராணுவத்துக்கோ, அவற்றுக்குத் தலைமை ஏற்றிருக்கும் 'ஈழப் போராளி' அமைப்புகளுக்குமோ கூட தெரியாது. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் படிப்படியாக வெளியேறும் பகுதிகளைக் கைப்பற்றுவதற்கான போர் நடக்கிறது என்று மட்டும் தெரிகிறது. சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் தேசிய இராணுவத்துக்கும் இலங்கை சிங்கள இராணுவத்துக்கும் இடையிலான போர். யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்கள் தவிர இந்திய இராணுவம் விலக்கிக் கொள்ளப்பட்ட பகுதிகளைக் கைப்பற்றுவதற்கான போரில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஈழப் போர் இப்போது மூன்றாவது கட்டத்தை அடைந்திருக்கிறது என்று சொல்லலாம். சிங்கள இராணுவத்தினருக்கு எதிரான போர்; இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு எதிரான போர் - ஆகிய முதலிரு கட்டங்களைவிட இப்போது இந்தியக் கைகூலியான, துரோகிகளின் தமிழ் தேசிய இராணுவத்துக்கு எதிரான போரில் பெரும் எண்ணிக்கையிலான ஈழத்தமிழ் இளைஞர்கள் பலியாகின்றனர். ஒருநாளைக்கு 50, 60 இளைஞர்கள் கொல்லப்படுகின்றனர்; அதே அளவினர் எதிரெதிர் தரப்பினர்களால் கைது செய்து கடத்தப்படுகின்றனர். இத்தனைக்கும் இவர்களில் பெரும்பான்மையினர் தமது சுய முடிவின் அடிப்படையில் இந்தப் போரில் இறங்கியவர்கள் அல்ல. ஈழத்துரோகிகளாலும், இந்திய இராணுவத்தாலும் பலாத்காரமாகக் கடத்திச் செல்லப்பட்டு, சீருடையும் ஆயுதங்களும் திணிக்கப்பட்டு போர் முனையிலே ஈழத்துரோகப் படையின் மனிதக் கவசமாக நிறுத்தப்படும் பள்ளிச் சிறுவர்கள்.

கடைசியாக, யாழ், திருகோணமலை நகரங்களை விட்டு இந்திய இராணுவம் வெளியேறிய பிறகு அவற்றைக் கைப்பற்ற நடக்கும் போரில் இதுவரை காணாத அளவு இரத்த ஆறு ஓடும் என்றே அனைவரும் கருதுகின்றனர். ஈழமக்களின் துயரத்தை எண்ணும்போது நெஞ்சு பதைக்கிறது. இன்றைய தலைமுறை மட்டுமல்ல; எதிர்கால இளைய தலைமுறையும் அழிந்து கொண்டிருக்கிறது. இந்தப் பேரிழப்புகளுக்கான முழுப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் ஈழத்துரோக அமைப்புகளும், இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தினரும், அதன் இந்திய எஜமானர்களும், அடிவருடிகளும் தாம்.

எவ்வாறாயினும், இன்னும் சில மாதங்களில் ஈழத்தைத் தமது இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிடுவார்கள், விடுதலைப்புலிகள். இன்னும் சில ஆண்டுகளுக்காவது ஈழமக்களின் விதியைத் தீர்மானிக்கும் சக்தியாக அவர்கள் இருப்பார்கள். எனவே இரண்டு கேள்விகள் ஈழமக்களின் மனதிலே பெரிதாக எழுந்து நிற்கின்றன. இந்திய, இலங்கை அரசுகளுடன் விடுதலைப் புலிகள் இப்போது நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் - பேரத்தில் என்ன முடிவு செய்யப் போகிறார்கள்? விடுதலைப் புலிகள் தமது கடந்த காலத் தவறுகளில் இருந்து பாடங்கற்றுக் கொண்டு எந்த அளவு ஜனநாயகபூர்வமாக நடந்துக் கொள்ளப்போகிறார்கள்?

பாசிச ராஜீவ் கும்பலின் இலங்கை கொள்கையை இதுவரை சாடிவந்த தேசிய முன்னணி ஆட்சி இந்தியாவில் ஏற்பட்டிருந்தபோதும், அண்டைநாடுகளுடனான உறவைச் சீரமைக்கப் போவதாகக் கூறிக் கொண்ட போதிலும் தெற்கு ஆசிய பிராந்திய ஆதிக்கப் பேராசையை இந்தியா கைவிடவில்லை. இன்னும் இந்தியப் படை விலக்கத்தைத் தாமதப்படுத்தி, பேரங்கள் நடத்திக் கொண்டிருப்பது இதையே காட்டுகிறது. இருந்தபோதும், இராணுவ ரீதியில் ஈழத்தில் ஏற்பட்டுள்ள தோல்வி மீண்டும் நேரடியான அதன் இராணுவத் தலையீட்டுக்கான துணிவைத் தற்காலிகமாகவேனும் கைவிடச் செய்யும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் எதிராக விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமை நிருபிக்கப் பட்டிருக்கிறது. ஆனால், ஜே.வி.பி.யை அடக்கி ஒடுக்குவதில் இலங்கை அரசும் - இராணுவமும் பெற்றுள்ள வெற்றி விடுதலைப் புலிகளுடனான பேரத்தில் அதற்கு பலமளிப்பதாக உள்ளது. இந்நிலையில் புலிகளை நிராயுத பாணியாக்காமலேயே, அதன் ஆயுத பலத்தை அங்கீகரித்தே ஈழத்துக்கு மாகாண சுயாட்சியுடன் கூடிய அதிகாரத்தை அளிக்க இலங்கை அரசு முன்வரலாம். இதை ஏற்பது, ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை விட்டுத்தருவதுதான். அநேகமாகப் புலிகளும் அதற்குத் தயாராய் இருப்பதாகவே தெரிகிறது.

இந்திய உளவுத் துறையுடனும் - அரசுடனும் பேரங்கள் நடத்தி அவை ஈழவிவகாரத்தில் தலையிட இடமளித்தது; இன வெறியுடன் சிங்கள சிவிலியன்களைப் படுகொலை செய்தது; ஈழத்தின் ஜனநாயகம் - சுதந்திரத்துக்குப் போராடிய சகபோராளிகளையும் தடைசெய்து, கொன்றது - ஆகிய தவறுகளை கடந்த காலத்தில் புலிகள் செய்து வந்தள்ளனர். இவற்றைத் தவறுகள் என்று இதுவரை அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. ஈழத்துரோகிகளுக்கு எதிரான புலிகளின் இராணுவ நடவடிக்கைகளை தவறெனக் கருதாத அதே சமயம் மற்ற பிற ஜனநாயகப் போராளிகளைப் புலிகள் ஒடுக்குவதை ஏற்றுக் கொள்ளவே முடியாது, விடுதலைப் புலிகள் பலகட்சி ஜனநாயக அமைப்பு முறையை இப்போது ஏற்குமாறு மாறி விட்டதாகக் கூறுகிறார்கள். இருந்தாலும் ஆயுத பலங்கொண்டு பாசிச முறையிலே தீர்த்துக் கொள்வது என்ற அணுகுமுறையையே சகபோராளிகள், மக்கள் மத்தியிலான முரண்பாடுகளுக்கும் அவர்கள் தீர்வாக வைத்து வந்திருக்கிறார்கள். எனவே எவ்வளவு துயரங்கள், இழப்புகள் நேரினும் ஜனநாயகம், குடியுரிமை உட்பட சகல அரசியல் உரிமைக்குமான மக்கள் திரள் அமைப்புகளையும், இயக்கங்களையும் கட்டியமைப்பது ஈழத் தமிழ் மக்களின் உடனடிக் கடமையாகிறது. இல்லையெனில் இவ்வளவும் காலமும் அவர்கள் சிந்திய இரத்தம் வினாகும். நீண்ட இருண்ட எதிர்காலத்தையே காண முடியும்.

படிப்பகம்

www.padippakam.com

# ராஜீவ் - வி.பி.சிங்

# கொள்கை மாற்றமில்லை

ராஜா வி.பி.சிங் ஆட்சிக்கு வந்து ஒரு மாதமாகி விட்டது. எல்லா புதிய ஆட்சியாளர்களையும் போலவே ஆரம்ப சூரத்தனங்களில் இறங்கியுள்ளது, தேசிய முன்னணி அரசு. ஆனால் இதையே பத்திரிக்கைகளும் 'அறிஞர்' பெருமக்களும் ஏதோ சாதனை நிகழ்ந்துவிட்டதைப் போல பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்.

''தீவிரவாதம் தலைவிரித்தாடும் பஞ்சாபுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவுமின்றி தைரியமாக வி.பி.சிங் சென்று வந்துள்ளார்; ஆடம்பர அந்நிய சொகுசு காரை ஒதுக்கிவிட்டு சாதாரண இந்தியக் காரையே பயன்படுத்துகிறார்; பாதுகாப்பு என்ற பெயரில் நடக்கும் கெடுபிடிகள் அறவே ஒழிக்கப்பட்டுவிட்டன; சாமானிய மக்கள் கெடுபிடி ஏதுமின்றி சுதந்திரமாக பிரதமரை சந்திக்கின்றனர்; காலை வேளையில் குளிராக இருக்குமே என்று கவலைப்பட்ட பிரதமர் மக்களது நலனைக் கணக்கில் கொண்டு மாலையில் சந்திக்கிறார்; முந்தைய ஆட்சியாளர்களைப் பழிவாங்கும் எண்ணமின்றி ஜனநாயக ரீதியில் எதிர்க் கட்சியினரையும் அரவணைத்துச் செல்கிறார்; பொருத்தமான - தகுதியான, நபர்களை கேபினட் மந்திரிகளாக்கி துவக்கத்திலேயே தமது அரசின் அருகதையை பன்மடங்கு உயர்த்திக் கொண்டுள்ளார்; யாருடைய தலையீடுமின்றி அமைச்சகங்கள் சுதந்திரமாகச் செயல்படுகின்றன'' என்று அடுக்கடுக்காக புதிய ஆட்சியாளர்களின் ஒவ்வொரு நடவடிக்கையையும் புகழ்ந்து தள்ளுகின்றனர்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு பாசிச ராஜீவ் பதவிக்கு வந்தபோது, ''ராஜீவ் சிரிக்கிறார்; சிந்திக்கிறார்; இளமைத் துடிப்புள்ள திருவாளர் பரிசுத்தம்; தீர்க்கமான முடிவுகள் எடுக்கிறார்'' என்று எப்படியெல்லாம் அந்த கதாபாத்திரத்தை விளக்கி விளக்கி வியாபாரம் செய்தார்களோ அதே பாணியில் இன்று வி.பி.சிங்கை விளம்பரப் படுத்துகிறார்கள். ராஜீவின் கேடுகெட்ட ஆட்சி வீழ்ந்து, சிறுபான்மை அரசானாலும் ஏதோ ஒரு மாற்று அரசு வந்துள்ளதே என்று தமக்குத் தாமே முதலாளித்துவ அறிஞர்களும், பத்திரிக்கைகளும் போலியாக ஆறுதலையடைந்து கொள்கின்றனர். அதை மக்களிடையே பரப்புவதோடு இச் சந்தர்ப்பவாத கூட்டணி அரசு மீது பிரமைகளையும் ஊட்டுகின்றனர்.

பிரச்சினை, வி.பி.சிங் அரசின் அணுகுமுறை, ஆரம்ப சூரத்தனங்கள் பற்றியது அல்ல; அன்றாட நடவடிக்கையில் அவர் என்ன செய்கிறார் என்பதுமல்ல. தேசிய முன்னணி அரசின் அடிப்படை கொள்கை அறிவிப்புகள் - அவற்றின் யோக்கியதை என்னவென்பதுதான். பிரச்சினைக்கு தீர்வு எதுவுமின்றி பிரச்சினையை தள்ளிப் போடும் - ஆறப்போடும் புதிய அரசின் உத்தியை மூடிமறைக்கத் தான் இந்த அற்பத்தனங்களைப் பெரிதுபடுத்துகின்றனர்.

### நல்லெண்ணத் தூதுவரின் விளக்கெண்ணெய் தீர்வு!

தேசிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்ததும் எதிர்கொண்ட உடனடி பிரச்சினைகள் இரண்டு. அவை பஞ்சாப் மற்றும் காஷ்மீர் பிரச்சினைகள். இவற்றுக்கென தனி மந்திரிசபை கமிட்டி அமைத்து, விரைவில் தீர்வுகாணப் போவதாக வி.பி.சிங் அரசு கூறுகிறது.

இந்திரா கொலை வழக்கை விலக்கிக் கொண்டு சில சீக்கிய தலைவர்களை விடுதலை செய்தது. பிரதமரும் துணைப் பிரதமரும் பொற்கோயிலுக்குச் சென்று பிரார்த்தனை நடத்தியது, பஞ்சாப் பிரச்சினையை விவாதிக்க சர்வ கட்சி கூட்டம், லூதியானாவில் சர்வ கட்சியினரின் நல்லெண்ண பேரணி நடத்தியது, 1984 இந்திரா படுகொலையை அடுத்து சீக்கியர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கலவரத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமளிப்பது முதலான சில நடவடிக்கைகள் - அறிவிப்புகளைச் செய்து சீக்கியர்களுடன் சுமூகமான உறவை ஏற்படுத்திக் கொள்ள வி.பி.சிங் அரசு முயற்சிக்கிறது.

இவைதவிர், நீல நட்சத்திர நடவடிக்கையால் வெறுப்படைந்து பதவி விலகிய சீக்கிய சிப்பாய்களுக்கு அரசுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளிப்பது, சாதாரண குற்றங்களுக்காக சிறையிலிடப்பட்ட சீக்கியர்களை விடுதலை செய்வது முதலானவற்றை லூதியானா சர்வகட்சிப் பேரணியில் வி.பி.சிங் அறிவித்துள்ளார்.

இவையெல்லாம், பஞ்சாப் பிரச்சினையை இப்புதிய அரசு தீர்த்துவிடும் என்ற மாயையை உருவாக்கும் நடவடிக்கைகள் தானே தவிர, இவையே தீர்வாகிவிடாது. சீக்கியர்களிடையே மிகவும் செல்வாக்குள்ள பிரிவாக தம்மை நிரூபித்துக் கொண்டுள்ள மான் பிரிவினர், வி.பி.சிங் கூட்டிய சர்வ கட்சி கூட்டத்தை புறக்கணித்ததோடு, பிரச்சினையைத் தீர்ப்பதில் அவர் அக்கறை கொண்டவராகத் தெரியவில்லை என்றும் கூறியுள்ளனர்.

1984 சீக்கியர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கலவரத்துக்குக் காரணமான குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும்; பஞ்சாபிலிருந்து துணை ராணுவப் படைகள் அனைத்தும் விலக்கப்பட வேண்டும், பஞ்சாபின் பயங்கரவாத அரசு எந்திரம் கலைக்கப்பட வேண்டும்; சிறையிடப்பட்டுள்ள சீக்கியர்களை விடுதலை செய்து அவர்கள் மீதான பொய் வழக்குகளை ரத்து செய்ய வேண்டும். நீல நட்சத்திர நடவடிக்கையை தலைமையேற்று நடத்திய தளபதி வைத்தியாவைக் கொன்ற தீவிரவாதிகளுக்கு பொதுமன்னிப்பு அளிப்பதோடு, தீவிரவாதிகளையும் உள்ளடக்கிய சர்வ கட்சி கூட்டம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளனர். ஏற்கனவே மான் பிரிவு அகாலிதள கட்சி அனந்த்பூர் சாகிப் தீர்மானத்தின் அடிப்படையிலான மாநில சுயாட்சி கோரிக்கையை உடனடி கடமையாக வகுத்துக் கொண்டுள்ளது. மான் பிரிவின் பின்பலமாக உள்ள தீவிரவாதிகள் 'காலிஸ்தான்' தனிநாடு தான் தமது லட்சியம் என்று மீண்டும் பிரகடனப் படுத்தியுள்ளனர்.

இக்கோரிக்கைகளை தேசிய முன்னணி மட்டுமல்ல; அதன் உயிர் நாடியைக் கையில் பிடித்துள்ள பாரதீய ஜனதாவும், போலிக் கம்யூனிஸ்டுகளும் ஒருக்காலும் ஏற்க மாட்டார்கள். லூதியானாவில் நடந்த சர்வகட்சி பேரணியில் அகாலி தளத்தின் ஒரு பிரிவின் தலைவரான பர்னாலா, அனந்த்பூர் சாகிப் தீர்மானத்தை நிறைவேற்றக் கோரிய போது, பாரதீய ஜனதாவும், 'இடது' கம்யூனிஸ்டுகளும் அதைக் கண்டித்தனர். இன்னும் உதவிப் பிரதமரான தேவிலால், பஞ்சாபுக்கு சண்டிகாரைக் கொடுப்பது, நதி நீர் பங்கீடு ஆகியவற்றை எதிர்த்து பிரச்சாரம் செய்துதான் வெற்றி பெற்றுள்ளார். எனவே இவர்களை மீறி 'நல்லெண்ண தூதுவர்' வி.பி.சிங் எந்த ஒரு புதிய தீர்வையும் சாதித்துவிட முடியாது.

மேலும் தேசிய ஒருமைப்பாடு என்ற மூடுதிரையின் பின்னே மையப்படுத்தப்பட்ட அரசு எந்திரத்தை கட்டியமைத்துள்ள பழைய, புதிய ஆட்சியாளர்கள் இத்தகைய 'பிரிவினை' வாத' கோரிக்கைகளையும் போராட்டங்களையும் அடக்கியே வந்துள்ளனர். பஞ்சாபுக்கு விட்டுக் கொடுத்தால் அது மற்ற தேசிய இனங்களிடமும் பற்றிக் கொண்டுவிடும் என்று அஞ்சுகின்றனர். அண்மையில் போடோலாந்து கிளர்ச்சியாளர்களுடன் தேசிய முன்னணி அரசு நடத்திய பேச்சுவார்த்தையில் கூட, அவர்களது சுயாட்சி உரிமைக்கான கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

இதே போல காஷ்மீர் பிரச்சினைக்கும் புதிய ஆட்சியாளர்களிடம் தீர்வு கிடையாது. சுயநிர்ணய உரிமை கோரும் தீவிர வாதிகளால் கடத்தப்பட்ட உள்துறை மந்திரியின் மகளை விடுவிக்க அரசு பணிந்து தீர்வுகாண முயலுவது போல் நாடகமாடியதே தவிர, இப்போது சுயநிர்ணய உரிமைப் போர் தீவிரமாகியதும் பழைய ஆட்சியாளர்களின் வழியில் அரசு பயங்கரவாதத்தை ஏவுவதையே தேசிய முன்னணி அரசும் தீர்வாகக் கொண்டுள்ளது.

காஷ்மீர் பிரச்சினையை நியாயப்படுத்தி பேசக் கூட இங்கு எந்த ஓட்டுக் கட்சியுமில்லை. போலிக் கம்யூனிஸ்டுகளோ பிரிவினைவாதம் என்று எதிர்க்கின்றனர். பாரதீய ஜனதாவோ பாகிஸ்தான் ஆதரவு முஸ்லிம் வெறியர்களின் அட்டகாசமாகச் சித்தரித்து இந்து வெறியைக் கிளறி விடுவதோடு, காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து தரும் அரசியல் சட்டத்தின் 370 வது பிரிவையே நீக்கக் கோருகின்றனர். பாசிச



பாதுகாப்பு கெடுபிடிகள் இல்லாமல் அன்றாடம் தரிசனம் தந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொள்ளும் வி.பி.சிங்; ஆரம்ப சூரத்தனம்.

ராஜீவ் கும்பலின் வழியிலேயே புதிய அரசும் பாகிஸ்தான் ஆயுத உதவியும் ஆதரவும் அளிப்பதாக வழக்கம் போலவே சாடத் தொடங்கிவிட்டது. ஆனாலும் இதர மாநிலங்களிலுள்ள முஸ்லிம்களிடம் ஓட்டுப் பொறுக்க வேண்டியிருப்பதால் காஷ்மீரை ஆளும் எதிர்க்கட்சி அரசின் மூலமாகவே போராட்டக்காரர்கள் மீது அடக்குமுறையை ஏவிவிட்டுள்ளது. இதுவும்கூட வட மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்கள் முடியும் வரைதான்; அதன்பிறகு வெளிப்படையாகவே அரசு பயங்கரவாதத்தை ஏவ தேசிய முன்னணி அரசு தயங்காது.

ஆக, பாசிச ராஜீவ் கும்பலின் வழியிலேயே பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதைத் தவிர, வேறு புதிய தீர்வு எதுவும் தேசிய முன்னணி அரசிடம் கிடையாது. அதாவது அதன் அணுகுமுறை வேறுபட்டதாக, சூழ்ச்சியும் தந்திரமும் கொண்டதாக, பிரச்சினை ஆறப்போட்டு சாந்தப்படுத்தும் நாசுக்கான முறைகளில் உள்ளதே தவிர, அடிப்படையில் பழைய ஆட்சியாளர்களிடமிருந்து எந்த வகையிலும் வேறுபட்டது கிடையாது.

### புதைகுழியில் பொருளாதாரம்! புனரமைக்க திட்டமில்லை!

தேசிய முன்னணி அரசுக்கு சவாலாக இருப்பது காஷ்மீர் - பஞ்சாப் பிரச்சினைகள் மட்டுமல்ல; அதைவிட பொருளாதார நெருக்கடி பூதாரகரமாக அச்சுறுத்துகிறது. பண வீக்கம், யானைக்காலாகப் பெருத்துவிட்டது. நாட்டின் மொத்த மக்கட் தொகையில் 50 சதவீதத்தினர் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளனர். கடந்த ஐந்தாண்டுகளுக்குள் விலையேற்றம் சராசரியாக 35% உயர்ந்துவிட்டது. நாட்டையே திவாலாக்குமளவுக்கு 1,60,000 கோடி ரூபாய் உள்நாட்டுக் கடனும், 70,000 கோடி ரூபாய் அந்நியக் கடனும் கழுத்தை நெறிக்கின்றன. இந்நிலைமைகளைக் கணக்கில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் பொருளாதாரமே புதைகுழிக்குப் போய்விடும் என்று முதலாளித்துவ பொருளாதார வாதிகளே புதிய அரசுக்கு எச்சரிக்கை விடுக்கின்றனர்.

ஆனால் தேசிய முன்னணி அரசு, முந்தைய ஆட்சியாளர்களே இதற்குக் காரணம் என்று கருணாநிதி பாணியில் பழி சுமத்துகிறதே தவிர உருப்படியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நடப்பு ஆண்டுக்கான பட்ஜெட் தயாரிப்பைக் கூட தள்ளி வைத்துவிட்டது. புதிய ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்க வேண்டி இருப்பதாலும், தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய பட்ஜெட்டை தயாரிக்க கால அவகாசம் தேவைப்படுவதாலும் அவசர கோலத்தில் பட்ஜெட்டை தயாரிக்க விரும்பவில்லை என்று நழுவுகிறார் நிதிமந்திரி.

உண்மை என்னவென்றால், இன்றைய பொருளாதார நெருக்கடியில் பற்றாக்குறை பட்ஜெட் தயாரித்து புதிய வரிச்சுமையை மக்கள் மீது ஏற்றினால், அது வரப்போகும் வட மாநில சட்டமன்றத் தேர்தல்களில் தோல்வியைக் கொண்டுவரும் என்ற பீதிதான் பட்ஜெட்டைத் தள்ளிப் போடுவதற்கான காரணம். இந்த ஆண்டுக்கு கவர்ச்சி - சலுகை பட்ஜெட்டைத் தயாரித்துவிட்டு அடுத்த ஆண்டில் வரிவிதிப்பை அதிகரித்துக் கொள்ளலாம் என்றாலும் அதற்கும் வழியில்லாத அளவுக்கு பொருளாதார நெருக்கடி தீவிரமாகிவிட்டது.

இப்பொருளாதார புற்றுநோய்க்கு பாசிச இந்திரா - ராஜீவ் கும்பல்கள் தான் காரணம் என்றாலும் அக்கேடுகெட்ட பாதைக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க புதிய ஆட்சியாளர்கள் தயாராக இல்லை. ஐந்தாண்டுகளுக்கு முன் கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்கும் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட அரசுக் கடன் பத்திரங்களுக்கு இப்போதைய அரசு வட்டியுடன் தொகையை வெள்ளைப் பணமாக தரவேண்டியுள்ளது. 'இது அயோக்கியத்தனமான மோசடித் திட்டம், கருப்புப்பண பெருச்சாளிகளை கொழுக்க வைக்கும் திட்டம். எனவே தொகையைத் திருப்பித் தரமாட்டோம்' என்று புதிய ஆட்சியாளர்கள் அறிவிக்க வேண்டியதுதானே!

மாறாக, பொருளாதாரத்தை திவாலாக்கும் வகையில் அவர்கள் சார்ந்துள்ள கருப்புப் பண பேர்வழிகளுக்கு தொகையைத் திருப்பிச் செலுத்தப் போகிறார்கள். இது ஒருபுறமிருக்க, ஏற்கனவே உள்ள கடன்சுமை நுகத்தடியாக அழுத்தும் போது, புதிதாக அன்னிய நாடுகளில் கடன் வாங்க மாட்டோம் என்று அறிவிக்கக் கூட அவர்கள் தயாராக இல்லை.

பொருளாதாரம் மரணப் படுக்கையில் வீழ்ந்து கிடக்கும் போது கவர்ச்சித் திட்டங்கள் - சலுகைகளை அறிவிப்பது, பொருளாதாரத்தைப் புதை குழிக்குத் தள்ளும் என்று அறிந்தே எதிர்க்கட்சி மாநில அரசுகளுக்குப் போட்டியாக கவர்ச்சித் திட்டங்களை வாரியிறைக்கிறது புதிய அரசு. வடமாநில எதிர்க்கட்சி அரசுகள் தேர்தல் வெற்றியைக் குறிவைத்து அரசு ஊழியருக்கு சம்பள உயர்வை அறிவிக்கிறதென்றால், தேசிய முன்னணி அரசு விவசாயிகளது கடன் அனைத்தையும் ரத்து செய்யப் போவதாக அறிவிக்கிறது. இதற்கெல்லாம் எங்கே நிதியிருக்கிறது? எப்படி சாதிக்கப் போகிறீர்கள் என்று பத்திரிக்கையாளர்கள் புதிய ஆட்சியாளர்களைக் கேட்டபோது மழுப்புகின்றனர். வயதானவர்களுக்கு பென்ஷன், அரசு ஊழியருக்கு சம்பள உயர்வு, விவசாயிகளது கடனை ரத்து செய்வது முதலான கவர்ச்சித் திட்டங்கள் உழைக்கும் மக்களுக்கே எதிரானவை என்பதுதான் அனுபவம் காட்டும் உண்மை. விவசாயக் கடனை ரத்து செய்தால் கூட்டுறவு வங்கிக்கு நட்டமேற்படும். அரசு இதை ஈடுசெய்ய வேண்டும். கடைசியில் இது மக்கள் மீது மீண்டும் வரிச்சுமையை ஏற்றுவதில் போய் முடியும். இத்தகைய சலுகைகள் பொருளாதாரத்தைப் புதைகுழிக்குத் தள்ளும் என்று அறிந்தும்கூட, எம்.ஜி.ஆர். - என்.டி.ஆர்., பாணியில் இலவசத் திட்டங்களை அறி



படிப்பகம்

www.padippakam.com

வித்து தமது செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள புதிய ஆட்சியாளர்கள் முனைகின்றனர்.

**'ஜனநாயக' சதிராட்டங்கள்! ஆரம்ப சூரத்தனங்கள்!**

இதே பாணியில், தாம் ஏதோ மாபெரும் ஜனநாயகத்துக்காக நிற்பவர்கள் போல் காட்டிக் கொள்வதற்காக, வானொலி - தொலைக்காட்சிக்கு தன்னாட்சி, தகவல் அறியும் குடியுரிமையை அளிக்க ஒரு கமிட்டியை நிறுவுவது, தேர்தல் சீர்திருத்தம் - கட்சித் தாவல் தடைச் சட்டத்தை மறு ஆய்வு செய்வது முதலான ஆரம்ப சூரத்தனங்களில் இறங்கியுள்ளனர்.

கட்சித் தாவல் தடைச் சட்டத்தை மறு ஆய்வு செய்வது - குறிப்பாக, கட்சிக் கொறடாவுக்கு கீழ்படியாத பிரதிநிதியின் தகுதியை நீக்கும் விதியை மாற்றுவது என்று புதிய அரசு பரிந்துரைத்துள்ளது. ஜனநாயகத்துக்கு இந்த விதி முள்ளாக உறுத்துகிறதாம். கட்சியினரை கொத்தடிமைகளாக கொறடாக்கள் ஆட்டிப் படைப்பதாக உள்ளதாம். எனவே கட்சிக்கு கூட்டுப்படும் அதேசமயம் ஒரு எம்.பி. அல்லது எம்.எல்.ஏ. தன்து கருத்தைச் சுதந்திரமாக வெளியிடுவதற்கு ஜனநாயக உரிமையை வழங்க வேண்டுமாம். ஒரு ஓட்டுக் கட்சி, உட்கட்சி ஜனநாயகத்தைப் பின்பற்றினால் இதை அனுமதிக்கும். எனில், ஒரு கட்சி, உட்கட்சி ஜனநாயகத்தைப் பின்பற்றுகிறதா இல்லையா என்பதை எதை வைத்து தீர்மானிப்பது? ஒரு எம்.பி. அல்லது எம்.எல்.ஏ. கட்சிக்கு கட்டுப்பட்டு கருத்தைக் கூறுகிறாரா, இல்லையா என்பதை எதை வைத்து முடிவு செய்வது? இப்படி எந்த முடிவும் காண முடியாமல் புதிய அரசின் பரிந்துரைகள் புஸ்வாணமாகிவிட்டன.

இதேபோலத் தான் தேர்தல் சீர்திருத்தம் பற்றிய புதிய அரசின் ஆலோசனைகளும் கோமாளித்தனமாக உள்ளது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வரைமுறையின்றி செலவு செய்வதைத் தடுக்க, அரசே தேர்தல் செலவுகளை ஏற்பது என்ற ஆலோசனையை முன்வைத்துள்ளது. எவ்வளவு நிதி ஒதுக்குவது, யார் கட்டுப்படுத்துவார்கள், வேட்பாளர் இதர வழிகளில் செலவு செய்வதை எப்படித் தடுப்பது என்ற பருண்மையான திட்டம் எதுவும் முன்வைக்கப்பட வில்லை. தொழிலதிபர்கள் வேட்பாளர்களுக்கு 'நன்கொடை' தர தடை ஏதுமில்லாத நிலையில் இத்தகைய கண் துடைப்பு சீர்திருத்தங்கள் உருப்படியாக எதையும் சாதிக்கப் போவதில்லை.

இத்தகைய 'ஜனநாயக' சதிராட்டங்கள் போதாதென்று, நிலச்சீர்திருத்தத்தை அடிப்படை விதியாக்கும் வகையில் அரசியல் சாசனத்தில் மாற்றத்தைக் கொண்டுவருவது, வேலைக்கான உரிமையை அடிப்படை உரிமையாக்குவது, புதிய தொழிலுறவுச் சட்டம், நிர்வாகத்தில் தொழிலாளர்களைப் பங்கேற்க வைப்பது என்று வாய்ப்புரட்சித் திட்டங்களை அடுக்கடுக்காக அறிவித்துள்ளது புதிய அரசு. பாசிச இந்திரா அவசர நிலை ஆட்சியின் அறிவித்து செயலிழந்து போன கொள்கைகள் தான் இவை; பின்னர் '77-'79 ஜனதா ஆட்சியில் உயிர்ப்பிக்கப்பட்டு செல்லாக் காசாகப் போன காகிதப்பூ திட்டங்கள்தான் இவை.

இவற்றோடு, ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது, நிதித்துறையில் தாமதத்தை ஒழிப்பது, மத்திய - மாநில உறவுக்கு ஒரு கவுன்சில், மகளிர் நலனுக்கென ஒரு கமிஷன், மண்டல் கமிஷன் அறிக்கையை ஆய்வு செய்வது, அண்டை நாடுகளுடன் நல்லுறவை வளர்ப்பது, விலைவாசி உயர்வைக் கண்காணிக்க ஒரு கமிட்டி, பஞ்சாயத்து ராஜ்ஜியத்தை கட்டியமைக்க ஒரு கமிட்டி, தகவல் அறியும் குடியுரிமைக்கை கவனிப்பதற்கான கமிட்டி, வேலைக்கான உரிமையை உறுதிபடுத்த ஒரு கமிட்டி, தேர்தல் வாக்குறுதிகளை குறிப்பிட்ட கால இலக்கிற்குள் நிறைவேற்றுவது என்று அடுக்கடுக்காக ஆரம்ப சூரத்தனங்களில் இறங்கியுள்ளது தேசிய முன்னணி அரசு. சிறுபான்மை அரசாக இருப்பதால் புதிய அரசுக்கு இத்தகைய சவடால்கள் அவசியமாகவும் இருக்கிறது. ஆனால் தாராள அனுமதி, ஏகபோக தடைகளை நீக்குவது, தனியார் - நவீன மயமாக்குவது ஏன்கிற ''தாராளவாதக் கொள்கைகளை தொடர்ந்து பின்பற்றுவோம்'' என்று வெளிப்படையாகவே அறிவித்துள்ளார் தொழிலமைச்சர் அஜித்சிங்.

அதேசமயம் விவசாயம் - கைத்தொழிலுக்கு முன்னுரிமை தருவோம் என்கின்றனர். தொழில் துறையில் அன்னிய ஏகாதிபத்தியங்கள் ஆதிக்கம் செலுத்துவதைப் போலவே, விவசாயத் துறையிலும் ஆதிக்கம் செலுத்தி, சூறையாட அனுமதிக்கும் ஏற்பாடுதான் இது. விவசாயிகளுக்கான சலுகைகள், திட்டங்கள் என்ற பெயரில் நவீன வகை பணக்கார விவசாயிகளையும் நிலப்பிரபுக்களையும் கொழுக்க வைக்கும் திட்டம்தான் இது. ஆனாலும், ''அன்னியக் கூட்டுக்கள் அவசியமான துறைகளில் மட்டுமே அனுமதிக்கப்படும்'' என்று சுயசார்பு நாடகமாடுகிறார் நிதி மந்திரி. இவர்கள் விரும்பும் துறைகளில் மட்டும் முதலீடு



*பஞ்சாப் பிரச்சினைக்கு தீர்வு எதுவுமின்றி பொற்கோயிலுக்குச் சென்று நல்லெண்ணத் தூதராக நாடகமாடும் வி.பி.சிங், மத்திய மந்திரிகள்.*

இதை ஏதோ ஆக்கபூர்வமான முயற்சியாகவும் அறிவுபூர்வமான நடவடிக்கையாகவும் காட்டி பத்திரிக்கைகள் பிரமையூட்டுகின்றன.

இவை யாவும் பாசிச ராஜீவ் காட்டிய ஆரம்ப சூரத்தனங்களைப் போலவே பிசுபிசுத்துப் போகும். ஏனென்னில், இப்போது அதிகாரத்துக்கு வந்திருப்பது தரகு அதிகார முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் ஒரு பிரிவினருக்குப் பதிலாக மற்றொரு பிரிவினரின் பிரதிநிதிகள்தான். இதில் எந்தப் பிரிவினருக்குச் சேவை செய்வது என்பதில்தான் ராஜீவ் - வி.பி.சிங் கும்பல்களுக்கிடையே வேறுபாடே தவிர அடிப்படைக் கொள்கைகளில் கிடையாது.

ராஜீவ் ஆட்சியில் வி.பி.சிங் நிதிமந்திரியாக இருந்தபோது அறிவித்த தொழிற் கொள்கைகள்தான் புதிய ஆட்சியிலும் பின்பற்றப்பட உள்ளது. அதாவது, ஏகாதிபத்திய, தரகு முதலாளிகளின் முதலீட்டுக்கு செய்வதற்கு ஏகாதிபத்தியங்கள் இளிச்சவாயர்களில்லை; விவசாய உற்பத்தி உறவுகளில் எந்த மாற்றத்தையும் செய்யாமல் கொண்டு வரப்படும் எந்த ஒரு சீர்திருத்தக் கொள்கையும் விவசாயிகளுக்கு ஒரு மண்ணும் செய்யப் போவதும் இல்லை.

ஆகவே பத்திரிக்கைகள் பிரமையூட்டுவதைப் போல, புதிய ஆட்சியானது பாசிச காங்கிரசுக்கு மாறானதோ, வேறானதோ அல்ல. பாசிசத்துக்கான அடிப்படைகளையும், பாசிச முறையில் வளர்க்கப்பட்டுள்ள அரசு எந்திரத்தையும் புரட்சிகரமான முறையில் தூக்கியெறியாமல் ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவுக்குப் பதில், மற்றொரு பிரிவின் பிரதிநிதிகள் ஆட்சிக்கு வருவது ஜனநாயகத்தின் வெற்றியாகிவிடாது. எனவே புதிய ஆட்சியின் மீது வளர்க்கப்படும் பிரமைகளை அம்பலப்படுத்தி, பாசிச அபாயத்துக்கு எதிரான போராட்டத்தை நாம் தொடர வேண்டும்.

■ மனோகரன்.



படிப்பகம்

www.padippakam.com

நெய்வேலி அருகே வடலூரில் உள்ளது "நெய்வேலி செராமிக்ஸ் - ரிஃப் ரேக்டரிஸ்" (NCRL) என்ற தொழிற்சாலை. கழிப்பறை, குளியலறைக்குத் தேவையான பீங்கான் சாதனங்களைத் தயாரிப்பது இந்த ஆலையின் முக்கியத் தொழில். கடந்த 25 ஆண்டுகளாக இந்த ஆலையிலே உழைத்து உருக்குலைந்து போன நூற்றுக்க ணக்கான தொழிலாளர்களின் எதிர்கால வாழ்க்கை இன்று கேள்விக் குறியாகிவிட் டது.

★ பாதுகாப்பற்ற சூழ்நிலையில் அற்பக் கூலிக்கு தமது உதிரத்தையே வியர்வை யாக்கி உழைத்த, ஏறத்தாழ 450 தினக்கூலி மற்றும் காண்டிராக்ட் தொழிலாளர்கள் வேலையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள் ளனர். இயந்திரத்தோடு இயந்திரமாய் ஓய் வில்லாமல் உழைத்த அத்தொழிலாளர்கள் இன்று பட்டினியால் பரிதவிக்கிறார்கள்.

★ லே-அப் கொடுப்பதற்கு முன் அரசி டம் முன் அனுமதி பெற வேண்டும்; அதை முன்கூட்டியே தொழிலாளர்களுக்கு அறி விக்க வேண்டும் என சட்டமிருந்தும் கூட அதையும் மீறி சட்டவிரோதமாக லே-ஆப் அறிவித்து தொழிலாளர்களை வதைக்கிறது நிர்வாகம்.

★ வேலைப்பளுவின் காரணமாகவும் குடும்பச் சூழ்நிலை காரணமாகவும் 1982ம் ஆண்டில் வேலைக்கு வராததற்கு 1989ம் ஆண்டில் தற்காலிக வேலை நீக்கம் செய் தும், இரண்டிலிருந்து 15 நாட்கள் வரை சம்பளப் பிடித்தம் செய்தும் ஆணவத் தோடு கொள்ளையடிக்கிறது நிர்வாகம்.

★ ஒப்பந்தப்படி 10 நாட்களுக்குள் முன் பணமாக தரவேண்டிய ஒரு மாத ஊதி யத்தை காலம் தாழ்த்தி தருவதைச் சுட்டிக் காட்டிய 5 தொழிலாளர்களை பழிவாங் கும் வெறியோடு வேலைநீக்கம் செய்துள் ளது, நிர்வாகம்.

★ அரசையும் தொழிலாளர்களையும் ஏய்க்க அடிக்கடி கணக்கு ஆண்டை மாற்று வதென்பது முதலாளியின் பின்பற்றும் பித் தலாட்டங்களில் ஒன்று. சட்டப்படி 8 மாத காலமான 30.11.89க்குள் தரப்பட வேண் டிய போனசை இன்றுவரை நிர்வாகம் வழங்கவில்லை. சென்ற ஆண்டைவிட உற் பத்தியும் விற்பனையும் இலாபமும் உயர்ந் துள்ள போதிலும் போனசைத் தராததோடு, இதை எதிர்த்துப் போராடும் தொழிலாளர் களை பழிவாங்கும் நோக்குடன் மிரட்டுகி றது; போராடினால் ஊதியத்தில் பிடித்தம் செய்வோம் என்று கொக்கரிக்கிறது.

மேற்கண்ட கொடுமைகள் மட்டுமா? சட்டப்படி தொழிலாளர்களுக்கு தரப்பட வேண்டிய சிற்றுண்டிச் சாலை, கூட்டுறவு பண்டக சாலை, கடன் வழங்கும் சங்கம் போன்ற எந்த வசதியும் இந்நிறுவனத்தில் கிடையாது. மூச்சை அடைக்கும் அளவுக்கு களிமண் உலையிலிருந்து மண் துகள்கள் ஆலை முழுக்க பரவிய போதிலும்கூட உரிய பாதுகாப்புச் சாதனங்கள் இன்றுவரை பொருத்தப்படாததால் தொழிலாளர்கள் உருக்குலைந்து போகிறார்கள். ஆனாலும் மருத்துவ உதவி முற்றாக மறுக்கப்படுகிறது.



புரட்சிகர தொழிற்சங்கம் உதயம்! துரோக சங்கங்கள் கலக்கம்!

என்.சி.ஆர்.எல். நிறுவனத்தின் தாய் கம்பெனி பாண்டிச்சேரியில் உள்ளது. அந்த ஆலையின் கணக்கையும் சேர்த்து உற்பத்திச் செலவு, விற்பனைச் செலவு, தேய்மானக் கழிவு முதலானவை அதிகரித் துவிட்டதாக நட்டக் கணக்கு காட்டி ஏய்க்கி றது நிர்வாகம். தொழிலாளர்களை மட்டு மின்றி, இந்நிறுவனத்தின் பங்குதாரர்களுக் கும் டிவிடெண்ட் தொகை தராமல் கடந்த மூன்றாண்டுகளாக பட்டை நாமத்தைப் போட்டு வருகிறது.

நிர்வாகத்தின் செல்லப் பிள்ளைக ளாகி விட்ட தொழிற் சங்கங்களின் துரோகத்தனங்களை அம்பலப்படுத்தியும், நிர்வாகத்தின் அட்டூழியங்களைப் தொழி லாளர்களிடம் தோலுரித்துக் கூட்டியும் புதி தாக உதயமாகியுள்ள, "உழைக்கும் மக் கள் விடுதலை முன்னணி" என்ற எமது சங்கம் முனைப்புடன் செயல்பட்டு வருகி றது. தொழிலாளர்கள் மத்தியில் செல் வாக்கு பெற்றுவரும் எமது சங்கத்தின் நட வடிக்கைகளைச் சகித்துக் கொள்ள முடி யாத துரோக சங்கங்கள், "முன்னணி சங் கத்தினர் பேச்சைக் கேட்டு போராடினால் ஆலையை மூடிவிடுவார்கள்" என்று தொழிலாளர்களிடம் பீதியூட்டி வருகின் றன. எங்களது சங்கச் செயலாளர் தோழர் கலைச்சித்தனை நிர்வாகம் தற்காலிக வேலைநீக்கம் செய்தபோது தொழிலாளர் கள் எதிர்ப்பு தெரிவித்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். அப்போது, தி.மு.க.வின் தொழிற்சங்கமான தொ.மு.ச. வைச் சேர்ந்த அருச்சுனனும், போலிக் கம் யூனிஸ்டுகளின் தொழிற்சங்கமான சி.ஐ. டி.யு.வைச் சேர்ந்த நாகப்பனும் கருங்காலி களாக மாறி தொழிலாளர்களை மிரட்டி வேலை செய்யச் சொன்னார்கள். கலைச் சித்தனை தற்காலிக வேலைநீக்கம் செய்யு மாறு நிர்வாகத்துக்கு ஆலோசனை கூறி யதே இவ்விரு சங்கங்கள்தான்!

இப்படி பல்வேறு நடவடிக்கைகளில் தொடர்ந்து துரோகமிழைத்து அம்பலமாகி அழியக்கூடிய நிலையில் இருந்த இச்சங் கங்கள் இப்போது போனஸ் பிரச்சினைக் காக கூட்டுக் கவுன்சில் நிறுவி (எமது சங் கம் நீங்கலாக) பேச்சுவார்த்தை நடத்த முற் பட்டுள்ளனர். 9.12.89 முதல் ஊக்க உற் பத்தி செய்வதில்லை என்று முடிவெடுத்த னர். மேலும் உண்ணாவிரதம், மறியல் போராட்டங்களில் ஈடுபடப் போவதாக அறிவித்தனர். அதனடிப்படையில் தொழி லாளர்கள் ஒற்றுமையாக ஊக்க உற்பத்தி செய்யாமல் போராடுகின்றனர். இதில் வேடிக்கை என்னவென்றால், முன்பு தோழர் கலைச்சித்தன் இந்த ஆலோச னையை முன்வைத்தபோது எதிர்ப்பு தெரி வித்த இச்சங்கங்கள் தவிர்க்கவியலாமல் தாமே இப்போராட்டத்தை மேற்கொண் டுள்ளன. ஆயினும் இச்சரியான போராட் டத்தை எமது சங்கம் முழுமையாக ஆத ரித்து உறுதியாக முன்னெடுத்துச் செல்ல உதவியும் வருகிறது.

தி.மு.க. ஆளுங்கட்சியாக, 'மார்க்சிஸ் டு'கள் அதன் கூட்டணிக் கட்சியாக இருப்ப தாலும் குறிப்பாக தொ.மு.ச. பொதுச் செய லாளரான தண்டபாணி மாவட்ட பேர வைக் கவுன்சிலின் செயலராக இருப்பதா லும், சி.ஐ.டி.யு. தலைவரான கோவிந்தரா சன் 'மார்க்சிஸ்டு' எம்.எல்.ஏ.வாக இருப்ப தாலும் போனஸ் பிரச்சினையில் நல்ல முடிவு ஏற்படும் என்று சில தொழிலாளர் கள் பிரமையில் உள்ளனர்.

ஆனால் தொழிலாளர்கள் தம்மையும் தமது வேலையையும் காத்துக் கொள்ள போராடுவதைத் தவிர வேறு வழி ஏது மில்லை. இனியும் அங்கீரிக்கப்பட்ட பெரிய சங்கங்கள் ஏதாவது சாதிக்கும் என்று நம்புவதில் பலனுமில்லை. பேச்சு வார்த்தை சமரச நாடகமாடி மேலும் பலர் வேலையிழக்கவும், வேலைப் பளுவை நிர் வாகம் திணிக்கவும்தான் இச்சங்கங்கள் உடந்தையாக இருந்து வந்துள்ளன என்ப தையே கடந்த கால அனுபவம் காட்டுகி றது. எனவே பிரமைகளை விசிறி எறிந்து நிர்வாகத்தின் தொழிலாளர் விரோத நடவ டிக்கைக்கு எதிராகவும், சங்கங்களின் துரோகத்திற்கு எதிராகவும் ஒற்றுமையுட னும், உறுதியுடனும் தொழிலாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

— உழைக்கும் மக்கள் விடுதலை முன்னணி, வடலூர்.



படிப்பகம்

www.padippakam.com

# ஊருக்கு 'நீதி'! ஊழியருக்கு அநீதி!

ராஜீவின் சர்வாதிகாரத்துக்கு எதிராக தள்ளாத வயதிலும் 'தர்மயுத்தம்' நடத்திய தீரராக, பத்திரிக்கை சுதந்திரத்தின் நாயகராக வர்ணிக்கப்படும் எக்ஸ்பிரஸ் நாளேட்டின் முதலாளி கோயங்காவுக்கு எதிராக இன்று எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் ஒரு தர்மயுத்தத்தில் இறங்கியுள்ளனர். எக்ஸ்பிரஸ், ஜனசத்தா, பைனான்சியல் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளேடுகளை அச்சிட்டு வெளியிடும் அதன் டெல்லிப் பதிப்பு அலுவலகத்தைச் சேர்ந்த 200 பத்திரிக்கையாளர்கள் உள்ளிட்ட 750 ஊழியர்கள் டிசம்பர் 13 முதலாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர். பச்சாவத் ஊதியக் குழுவின் பரிந்துரைகளை உடனடியாக அமுல்படுத்தக் கோரியும், மருத்துவ, பயணப்படி அலவன்சுகள், தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை மீண்டும் பணியில் அமர்த்துவது முதலான கோரிக்கைகளையும் முன்வைத்து ஊழியர்கள் ஏறத்தாழ ஒரு மாத காலமாகப் போராடி வருகின்றனர். போராட்டம் துவங்கிய ஒரு வாரத்திற்குள் எக்ஸ்பிரஸ் நிர்வாகம், டெல்லி பதிப்பையே நிறுத்தியதோடு சட்ட விரோதமாக கதவடைப்பும் செய்துள்ளது.

எக்ஸ்பிரஸ் சங்கிலித் தொடர் பத்திரிக்கை நிறுவனம் டெல்லியில் மட்டும் இயங்கும் நிறுவனமல்ல. நாடெங்கும் விரிந்துள்ள இந்நிறுவனம் நான்கு பெயர்களில் இயங்குகிறது. இந்தியன் எக்ஸ்பிரஸ் பம்பாய் லிமிடெட் நிறுவனம் டெல்லி, பம்பாய், சண்டிகார், அகமதாபாத், பூனா ஆகிய நகரங்களில் ஆங்கில நாளேட்டை அச்சிட்டு வெளியிடுகிறது. இந்தியன் எக்ஸ்பிரஸ் மதுரை லிமிடெட் நிறுவனம் சென்னை, மதுரை, பெங்களூர், ஹைதராபாத், விஜயவாடா, கொச்சி, விஜயநகரம் ஆகிய இடங்களில் ஆங்கில நாளேட்டைப் பதிப்பிக்கிறது. தமிழில் தினமணி நாளேடு சென்னை மற்றும் மதுரையில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. ஆந்திர பிரபா லிமிடெட் நிறுவனம் தெலுங்கு மொழி நாளேட்டை சென்னை, விஜயவாடா, ஹைதராபாத், விஜியநகரம் ஆகிய இடங்களில் அச்சிட்டு வெளியிடுகிறது. டிரேடர்ஸ் லிமிடெட் என்னும் நிறுவனம் குஜராத்தி மொழி செய்தித்தாளை அகமதாபாத், பரோடா, ராஜ்கோட் ஆகிய இடங்களில் வெளியிடுகிறது.

இந்நான்கு நிறுவனங்களும் கோயங்காவுக்குச் சொந்தமானதாக இருப்பினும், தனித்தனி நிறுவனங்களாகவும், அதன் ஊழியர்களுக்கு வேறுபட்ட சம்பளம் என்னும் கையாளப்படுகிறது. நிர்வாக வசதிக்காக இப்படிச் செய்திருந்தாலும் இவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற பெரிய தொழில் நிறுவனத்தின் ஊழியர்கள் தான்; எனவே தொழில் சட்டப்படி முதல் பிரிவு நிறுவனமாகக் கருதி முறைப்படி ஊதிய உயர்வும் இதர சலுகைகளும் அளிக்கப்பட வேண்டும் என்கிறது பச்சாவத் ஊதியக் குழுவின் பரிந்துரை.

ஆனால் எக்ஸ்பிரஸ் நிர்வாகம், இவை தனித்தனி நிறுவனங்கள் என்றும், இவற்றை இரண்டாம் நிலை அல்லது மூன்றாம் நிலை நிறுவனங்களாகக் கருதப்பட வேண்டுமென வாதிடுகிறது. பச்சாவத் பரிந்துரையை ஏற்று இரண்டாம் நிலை நிறுவனத்திற்குரிய ஊதியத்தைத் தர தயாராக இருப்பதாக கூறுகிறது. கடந்த ஆண்டு ஆகஸ்டு 31ல் மத்திய அரசு பச்சாவத் பரிந்துரையை செயல்படுத்துமாறு அனைத்து பெரும் பத்திரிக்கை நிறுவனங்களுக்கும் ஆணை பிறப்பித்தும், கூட இன்றுவரை எக்ஸ்பிரஸ், டைம்ஸ் ஆப் இந்தியா ஆகிய பெரும் சங்கிலித் தொடர் நிறுவனங்களும், பேட்ரியாட், மிலாப் முதலான நடுத்தர ரக பத்திரிக்கைகளும் அவற்றைச் செயல்படுத்தவில்லை.

எக்ஸ்பிரஸின் டெல்லிப் பதிப்பு ஊழியர் சங்கம் பச்சாவத் பரிந்துரையை அமுல்படுத்தக் கோரி நவம்பர் 9 முதலாக வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்தது. பின்னர் நவம்பர் 29 அன்று, அதாவது தேர்தல் முடிவுகள் வெளியாகும் நேரத்தில் போராட்டத்தைத் துவக்கி, நிர்வாகத்தை நிலைகுலையச் செய்ய தீர்மானித்தனர். ஆனால் ஈராண்டுகளுக்கு முன்பு ஊழியர்கள் போராடிய போது "இவர்கள் காங்கிரசின் கைக்கூலிகள்" என்று நிர்வாகம் கீழ்த்தரமாக அவதூறு செய்ததால், இப்போதும் அதேபோல பழிதூற்றக்கூடும் என்று எண்ணி, போராட்டத்தைத் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் நடத்த முடிவு செய்தனர். அதன்படியே டிசம்பர் 13 முதலாக காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர்.

அரசாங்கத்தின் கொள்கை முடிவுகள், சமூக நடப்புகள் பற்றி காரசாரமாக எழுதும் எக்ஸ்பிரஸ் எழுத்தாளர்கள் இன்று நிர்வாகத்துக்கு எதிராக வீதியில் நின்று போராடுகிறார்கள். கடந்த மூன்றாண்டுகளாக, பல்வேறு நெருக்கடிகள் கொடுத்தும் கூட ராஜீவ் அரசால் அசைக்க முடியாத எக்ஸ்பிரஸ் சமஸ்தானத்தை இன்று அதன் பத்திரிக்கையாளர்களின் பேனா முனை சாதித்து விட்டது. தீவட்டி ஊர்வலம், ஆர்ப்பாட்டங்கள், சுவரெழுத்து, சுவரொட்டி, தட்டிகள் மூலம் தமது போராட்டத்தை ஊழியர்கள் தொடர்கின்றனர். அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்திய போது, 1000க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

"ஊழல் எதிர்ப்புப் போராளி என்று வெளிநாடுகளில் பட்டம்! உள்நாட்டிலோ சுரண்டல் பேர்வழியாக கொட்டம்!" "பச்சாவத் பரிந்துரையை உடனே அமுல்படுத்து!" என்ற முழக்கங்கள், கேலிச்சித்திரங்கள் கொண்ட அட்டைகளை ஏந்தியபடி ஊழியர்கள் தினமும் வாயிற்கூட்டங்களை நடத்துகின்றனர். "ஒருநாள் நாங்கள் வென்று வருவோம்" என்ற எழுச்சிமிகு பாடலை கூட்டாக இசைக்கின்றனர். போராட்டம் உறுதியுடன் முன்னேறத் தொடங்கியதும், எக்ஸ்பிரஸ் நிர்வாகம் பச்சாவத் பரிந்துரையை அமுல்படுத்த புத்தாண்டுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொழிலாளர் நல ஆண்ணயர் வாக்களித்தார். ஆனால் அது புத்தாண்டு மோசடியாகி விட்டது.

"நாங்கள் கடந்த பத்தாண்டுகளாக ஊதிய உயர்வுக்காகப் போராடி வந்துள்

*ஊழியர்களின் நியாயமான போராட்டத்தை ஒடுக்க எக்ஸ்பிரஸ் அலுவலகத்தை முற்றுகையிட்டுள்ள போலீசு.*






படிப்பகம்

www.padippakam.com

ளோம். இப்போதுதான் எங்களுக்கு பச்சாவத் பரிந்துரையின்படி நீதி கிடைத்திருக்கிறது. ஆனால் நிர்வாகமோ யோக்கியமற்ற முறையில் நடந்து கொள்ளுகிறது. நேற்று வரை, சட்டத்தின் மாண்பை நிலைநாட்டும் புதிய ஆட்சிக்காக குரல் கொடுத்த பத்திரிக்கை நிர்வாகம் இன்று, சட்டத்தையே காலில் போட்டு மிதிக்கிறது'' என்று சாடுகிறார், ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் தல்வார்.

ராஜீவின் கூட்டாளியும் தரகுப் பெரு முதலாளியுமான அம்பாணியின் மோசடிகளை அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் அம்பலப்படுத்திய எக்ஸ்பிரஸின் பொருளாதார ஆலோசகர் குருமூர்த்தி, இப்பொழுது கோயங்காவின் மோசடிக்கு நியாயம் கற்பிக்கிறார். ''ஒரே சங்கிலித் தொடர் நிறுவனமானாலும் வேறுபட்ட நிர்வாகங்களின் கீழ் எண்ணிக்கையில் குறைவான பிரதிகளை அச்சிடுவதால் இரண்டாம் நிலை நிறுவனமாகத்தான் கருதவேண்டும். ஏற்கனவே நாங்கள் ஆண்டுக்கு 4 கோடி ரூபாய் நட்டப்பட்டு வருகிறோம். பச்சாவத் பரிந்துரையை அமுல்படுத்தினால் மேலும் 2 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டு நாங்கள் திவாலாக நேரிடும்'' என்று நியாய வாதங்களை அடுக்குகிறார்.

ஆனால் எக்ஸ்பிரஸின் நிறுவனத்தின் ஆண்டு வருமானம் 1983ல் இருந்து 1987க்குள் 80 கோடி ரூபாயாக உயர்ந்து ஏற்கனவே முதல்நிலை தொழில் நிறுனப் பட்டியலில் உள்ளது. மொத்த இலாபமும் பம்பாயில் உள்ள முதலாளி கோயங்காவுகுப் போகிறதே தவிர, எக்ஸ்பிரஸின் நான்கு நிறுவனங்களின் எல்லைக்குள் முடங்கி விடுவதில்லை. எனவேதான், ராஜீவின் தேர்தல் பிரச்சாரத்தை கிண்டல் செய்து எக்ஸ்பிரஸ் வெளியிட்ட கேலிச்சித்திரத்தின் பாணியிலேயே, ''எமது நாடித் துடிப்பெல்லாம் பச்சாவத் பரிந்துரைக்கே! ஆனால் அவர்களின் வருமானமெல்லாம் பம்பாய்க்கே பாய்கிறது!'' என்று நிர்வாகத்தை அம்பலப்படுத்தி எக்ஸ்பிரஸ் ஊழியர்கள் பொருத்தமாகவே சாடுகின்றனர்.

எக்ஸ்பிரஸ் நிறுவனம், 4 தனித்தனி நிர்வாகத்தின் கீழ் இயக்கப்பட்டாலும், இந்நான்கு நிறுவனங்களும் தனித்தனியே சென்று செய்தி சேகரிப்பதில்லை. உதாரணமாக, டெல்லி நிருபர்கள் பாராளுமன்ற விவகாரங்களைப் பற்றி சேகரிக்கும் செய்தி அனைத்து நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டு பதிப்பாகிறது. இதற்கென தனியே தமிழக நிருபர்கள் சென்று செய்தி சேகரிப்பதில்லை. அதே போல தமிழக நிருபர்கள் சேகரிக்கும் செய்தி டெல்லிக்குப் போகிறது. நாடு முழுவதும் எக்ஸ்பிரஸ் நாளேட்டுக்கு ஒரே தலையங்கம்தான் எழுதப்படுகிறது. ஒவ்வொன்றுக்கும் கோயங்கா தனித்தனியே செலவு செய்வதில்லை. ஆனால் இலாபம் மட்டும் 4 இடங்களில் இருந்தும் கொட்டுகிறது. நிர்வாகத்தின் வாதப்படிப் பார்த்தால் ஒவ்வொரு ஊழியருக்கும் நான்கு மடங்கு ஊதியம் அல்லவா தரப்பட வேண்டும்?

ஊழியர்களைப் பழிவாங்கும் போது மட்டும் வெவ்வேறு நிறுவனங்களாகக் கருதாமல் டெல்லி ஊழியரை தமிழ்நாட்டுக்கும், தமிழக ஊழியரை ஆந்திராவுக்கும், பெங்களூர் ஊழியரை குஜராத்துக்கும் விசிறியடிக்கிறது, எக்ஸ்பிரஸ் நிறுவனம்.



ஊருக்கு உபதேசம் செய்யும் 'ஜனநாயக'வாதிகள்: எக்ஸ்பிரஸ் ஆசிரியர் அருண்ஷோரியும் முதலாளி கோயங்காவும்.

ஆனால் ஊதியம், சலுகை என்று வரும் போது தனது சுரண்டல் கொள்ளைக்கு வசதியாக தனித்தனி நிறுவனங்களாகக் காட்டி மாய்மாலம் செய்கிறது. டெல்லி ஊழியர் போராட்டத்துக்கு முன், சென்னை, மதுரை, கொச்சி, பெங்களூர், விஜயவாடா, ஹைதராபாத், விஜயநகரம் ஆகியவற்றின் ஊழியர் சங்கங்கள் ஒன்றிணைந்து ஒரு கூட்டுக் கமிட்டியை நிறுவி வேலை நிறுத்த நோட்டீசு கொடுத்தனர். எக்ஸ்பிரஸ் நிர்வாகமோ, காட்டுமிராண்டித் தனமான டி.வி.எஸ். நிறுவனத்தின் வழியில் சங்கங்களைப் பிரித்து தனித்தனியே ஊதிய உயர்வு ஒப்பந்தங்களைத் திணித்து வருகிறது. நிர்வாகத்துக்கு ஜால்ரா போடும், நிர்வாகமே உருவாக்கிய சங்கங்கள் மட்டும்தான் அங்கீகரிக்கப் படுகின்றன. இதர சங்கங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு அதன் ஊழியர்கள் பழிவாங்கப் படுகின்றனர். ஆனாலும், டெல்லியில் போராடும் ஊழியர்களுக்கு ஆதரவாக சென்னையில் 90% ஊழியர்கள் கருப்புநாடா அணிந்து நிர்வாகத்தின் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். மதுரையில் இரண்டு நாட்கள் அதிரடி வேலைநிறுத்தம் நடத்தினர்.

ஏறத்தாழ ஒருமாத காலமாக டெல்லி ஊழியர்கள் போராடியும்கூட நிர்வாகம் கதவடைப்பை நீக்கவோ, கோரிக்கையை ஏற்கவோ முன்வராமல் மேலும் தனிமைப்பட்டுப் போயுள்ளது. டெல்லியில் தயாராகும் ஞாயிறு மலர் மற்றும் விஞ்ஞான மலர் ஆகியவற்றில் எழுதும் கருங்காலி கட்டுரை ஆசிரியர்கள் சிலரை சென்னைக்குக் கொண்டு வந்து அவற்றைத் தயாரித்து வருகிறது, திமிர்பிடித்த நிர்வாகம். அதேசமயம் எக்ஸ்பிரஸின் மூத்த பத்திரிக்கையாளர்கள் போராட்டக்காரர்களுடன் கைக்கோர்த்துக் கொண்டு முழக்கமிடுகின்றனர். குஷ்வந்த் சிங், நிகில் சக்ரவர்த்தி போன்ற பிரபல பத்திரிக்கையாளர்கள் கூட தமது ஆதரவைத் தெரிவித்து வாயிற்கூட்டங்களில் உரையாற்றுகின்றனர். தேசிய முன்னணி அரசின் தொழிலாளர் நல மந்திரியான ராம் விலாஸ் பஸ்வான் கூட வெளிப்படையாக தமது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

ஆனால் சுதந்திரம், ஜனநாயகம், ஊழல் ஒழிப்பு பற்றி பத்தி பத்தியாக எழுதும் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் அருண்ஷோரி, ''ஊழியர்களுக்கு மிகையாக ஊதியம் தரப்படுகிறது'' என்று தனது எஜமான விசுவாசத்தை ஒழுக விட்டுள்ளார். டெல்லியில் போராட்டம் துவங்குவதற்கு முன்னரே ஊழியர்களின் கோரிக்கைகளை கொச்சைப்படுத்தி தொடர்ச்சியாக புளுகுமூட்டைகளை அவிழ்த்து விட்டார் இந்த 'தூய ஜனநாயகவாதி!' பச்சாவத் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு ஊழியர்கள் முறையிட்ட உடனேயே அருண்ஷோரி முதலாளியுடன் சேர்ந்து கொண்டு அவதூறு செய்வது, மக்களிடம் தம்மை யோக்கியமானவர்களாகக் காட்டிக் கொள்வது என்று கீழ்த்தரமாகச் செயல்பட்டு முற்றாக அம்பலப் பட்டுப் போயுள்ளார்.

பத்திரிக்கை நிறுவனம் என்றால் அது ஜனநாயகப் பூர்வமானதாக, சட்டம், நீதி, நியாயத்துக்குக் கட்டுப்பட்டதாக இருக்கும் என்ற ஒரு பிரமை பலரிடம் உள்ளது. அதுவும் 'ராஜீவுக்கு எதிராக ஜனநாயகத்துக்கான போரில் குதித்த' எக்ஸ்பிரஸ் இதில் முன்னோடியாக இருக்கும் என்று பலரும் கருதி வந்தனர். ஆனால் ஜனநாயக முகமூடிகளை வீசியெறிந்துவிட்டு, எல்லா முதலாளிகளையும் போலவே மிகவும் குரூரமாக ஊழியர்களின் உரிமையைப் பறித்து சுரண்டிக் கொழுக்கும் திமிர் பிடித்த கொள்ளையன்தான் கோயங்கா என்பதை இப்போராட்டம் தெளிவாகவே நிரூபித்துவிட்டது.

ப குமார்.

படிப்பகம்

www.padippakam.com

★ புதிய ஜனநாயகம் அட்டை முகப்பில் இந்தியப் புரட்சிக்காகப் பாடுபட்டு உயிர் நீத்த தியாகிகளின் படத்தையும் அவர்களின் செயல்திறன் ஆகியவற்றைக் கோடிட்டுக் காட்டி அரை அல்லது முழுப் பக்க அளவில் போட்டால் நமது நாட்டுத் தியாகிகளின் செய்தி என மக்கள் வாங்கிப் படிக்க ஏதுவாக இருக்கும்; செய்வீர்களா?

● அவசியந்தான்! செய்வோம்.

## தேசிய இனப்பிரச்சினை...

★ இந்தியாவில் தேசிய இனப் பிரச்சினை எப்படி உள்ளது? ஒடுக்கப்படும் இந்திய தேசிய இனங்கள் பிரிந்து போவது சரியானதா? இல்லையா? தேசிய இனப் பிரச்சினையை முதன்மையாக எடுத்துத் தனது போராட்டப் பாதையை அமைத்துக் கொண்டிருக்கும் அமைப்புகளுடன் உங்களது உறவு பற்றி?

● இந்தியாவிலுள்ள பல்வேறு தேசிய இனங்களும் ஒடுக்கப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன. ஆனால் காஷ்மீரி, நாகா, மிஜோ போன்ற வடகிழக்கில் உள்ள தேசிய இனங்களும், தேசிய சிறுபான்மையினரும்தான் இந்த ஒடுக்குமுறைக்கு எதிராக உறுதியுடன் நீண்ட காலமாகப் போராடி வருகிறார்கள். மற்றவை தேசிய இன எழுச்சி பெற்றுப் போராடுவதாகக் கூற முடியாது. அப்படி இருப்பதாக சில 'குழுக்களும் அறிஞர்களும்' மிகைப்படுத்துகிறார்கள். பிராந்தியக் கட்சிகளின் தேர்தல் வெற்றிகளை ஆதாரமாகக் கருதுகிறார்கள். காங்கிரசுக்கு மாற்றான, கட்சிகள் இல்லாத நிலையில் பிராந்தியக் கட்சிகள் வெற்றி பெறுகின்றன. காங்கிரசு போன்ற அகில இந்தியக் கட்சிகளும் பிராந்திய அரசியல் நடத்துவதையும் பார்க்கிறோம்.

ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் பிரிந்து போவது சரியா, இல்லையா என்ற விவகாரத்தில் நாம் நடுநிலை வகிக்கிறோம். பிரிந்துபோவதா, இணைந்திருப்பதா என்பதை ஒடுக்கப்படும் தேசிய இன மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். அவர்கள் சார்பாக கையளவேயான சில தனிநபர்களும் அவர்கள் தலைமையிலான குறுங்குழுக்களும் இப்போது செய்துவரும் வாதங்களை ஏற்க முடியாது. இத்தகைய குறுங்குழு குட்டி முதலாளிகள், தேசிய முதலாளிகளை அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்தும் அதேசமயம் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கிய புதிய ஜனநாயகப் புரட்சிதான் இன ஒடுக்குமுறைக்கு முடிவுகட்டி, 'பூரண ஜனநாயக'த்தை அடைவதற்கான வழியென அதற்கு அணிதிரட்டிப் போராடுவோம்.

தேசிய இனப்பிரச்சினையை முதன்மையாக எடுத்துத் தனது போராட்டப் பாதையை அமைத்துக் கொண்டிருக்கும் அமைப்புகள் பலவும் உள்ளன. 1. மார்க்சிய - லெனினியப் புரட்சிகர இயக்கத்தில் இருந்து இனவாதிகளாகச் சீரழிந்து போனவர்கள் சந்தர்ப்பவாதமான முறையில் தேர்வு செய்து கொண்டு அமைத்துள்ள குழுக்கள், 2. இன்னமும் 'மக்கள் ஜனநாயக' அல்லது 'புதிய ஜனநாயக'த் திட்டத்தை வைத்துக் கொண்டு குறுக்குவழியில் எளிதாகவும், விரைவாகவும் செல்வாக்குத் தேடிவிடும் விருப்பத்துடன் தேசிய இனப் பிரச்சினைக்குத் தமது திட்டத்தைவிட முக்கியத்துவமளிக்கும் குழுக்கள், 3. தமது வர்ண இன (RACE) கண்ணோட்டத்துக்கே தேசிய இன (Nation) சாயம் பூசிக் கொண்டுள்ள குழுக்கள் - கட்சிகள், 4. தமது பிழைப்புவாத அரசியலுக்கு வசதியாக இருக்குமென தேசிய இன உரிமை முழக்கத்தை எடுத்துக் கொண்டுள்ள குழுக்கள், 5. சாதியக் கண்ணோட்டத்துக்கே தேசிய இன அரசியலைப் போர்த்துக் கொண்டுள்ள குழுக்கள், 6. இன வெறியர்களாகச் சீரழிந்து போன குழுக்கள். இவர்களிலே பயங்கரவாதப் பாதையையும் சமரசப் பாதையையும் தெரிவு செய்துகொண்ட இரு பிரிவினர்.

இந்தக் குழுக்கள் - கட்சிகள் அனைத்தும் உண்மையாக, நேர்மையாக தேசிய இன சுய நிர்ணய உரிமைக்காகப் போராடுபவை அல்ல. எனவே இப்படிப்பட்டவற்றை ஆதரிக்க முடியாது. ஆனால் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக மக்களைத் திரட்டிப் போராடும் அமைப்பு உருவாகுமானால் அதன் கோரிக்கையை ஆதரிப்போம்.

★ நாடு தழுவிய கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ) இல்லாத நிலையில் உடனடி ஐக்கியத்திற்கான வாய்ப்பும் இல்லாத நிலையில் பல்வேறு 'தேசிய இனங்களின் சிறைக்கூடமான' இந்தியாவில் ஒட்டுமொத்த வர்க்கப் போராட்டம் என்பதற்குப் பதில் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை ஏன் முன்னெடுக்கக் கூடாது?

தேசிய இனம் ஒன்று உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வாழும் நிலையில் குட்டி முதலாளித்துவ அல்லது முதலாளித்துவக் கட்சி/அமைப்பின் தலைமையில் நடைபெறும் தேசிய இன விடுதலைப் போரை ஆதரிக்கும் போது, மக்களுக்கு இன உணர்வை எளிதில் ஊட்ட இயலும் - அணிதிரட்ட இயலும் என்ற நிலையில் கம்யூனிஸ்ட் கட்சியே ஏன் தேசிய இன விடுதலைப் போரையோ அல்லது தேசிய சுயநிர்ணய உரிமைப் போரையோ நடத்தக் கூடாது?

● எது சரியானது, அவசியமானதோ அதைக் கடினமானது என்பதற்காகக் கைவிடுவதும், எது எளிதானது விரைவானதோ அதைத் தெரிவுசெய்து கொள்வதும் என்ற போக்கு அடிப்படையில் தவறானது. கறாராகச் சொல்வதானால் சந்தர்ப்பவாதம் என்பது இது தான். குறுகிய கால, உடனடி நலன்களுக்காக நீண்டகால, அடிப்படை நலன்களாகக் கைவிடுவது தானே சந்தர்ப்பவாதம்!

அடுத்து, 'திராவிட இயக்கம் மக்கள் செல்வாக்கையும், வெற்றியையும் பெற்றுவிட்டது; கம்யூனிச இயக்கம் அவற்றிலே தோற்றுவிட்டது' என்ற தவறான முடிவின் அடிப்படையில் இந்தச் சந்தர்ப்பவாதம் நியாயப்படுத்தப்படுகிறது. முதலாவதாக, திராவிட இயக்கம் தேசிய இன (Nationalities) அடிப்படையிலானது அல்ல. வர்ண இன (Racial) சாதி அடிப்படையிலானதாகும். அதன் தேர்தல் வெற்றி, மக்கள் செல்வாக்குக் கூட அதன் நிலைப்பாடுகளைக் கைவிட்டு சமரசம் செய்துகொண்ட பிறகுதான் அடைந்தவை. இரண்டாவதாக, திராவிட இயக்கத்தின் நிலைப்பாடுகளை எதிர்க்கும் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் தேர்தல் வெற்றி, மக்கள் செல்வாக்கு திராவிட இயக்கத்தின் வெற்றியையா குறிக்கின்றன?

மூன்றாவதாக, கம்யூனிச இயக்கம் தோன்றியதில் இருந்து பெரும்பான்மையான காலம் தொழிற்சங்க - பொருளாதார வாதத்திலும் நாடாளுமன்ற சந்தர்ப்ப வாதத்திலும் மூழ்கிக் கிடந்தது. அதிலிருந்து முறித்துக் கொண்ட புரட்சியாளர்களும் இடது தீவிர வாதத்தையே நடைமுறைப் படுத்தினார்கள். இந்த தவறுகளைத் திருத்திக் கொண்டு மார்க்சிய - லெனினிய அரசியல் கோட்பாடுகளும் அரசியல் - இராணுவ யுத்தத் தந்திரங்கள், போர்த் தந்திரங்களும் வகுத்துக் கொண்டு சரியான பாதையில் செல்ல இப்போது தான் முயலுகிறார்கள். அதற்குள் கம்யூனிச இயக்கம் தோற்றுப் போனது என்று எப்படிக் கூற முடியும்? தோற்றுப் போனது போலிக் கம்யூனிசம் தானே?

நான்காவதாக, வர்ண இன, சாதிக் கண்ணோட்டம் என்ற நஞ்சு கலவாத, கறாரான பொருளில் அறிவியல் அடிப்படையில் தமிழ் தேசிய இன இயக்கம் தோன்றி, வளர்ந்து வருவதாகக் கூற முடியுமா? அப்படிப் பேசுபவர்கள் தனி நபர்களாகத் தான் உள்ள






படிப்பகம்

www.padippakam.com

'புதிய ஜனநாயக'த்தின் கடந்த மூன்று இதழ்களிலும், இந்த இதழிலும் இடம்பெற்ற கேள்விகள் 'புதிய ஜனநாயகம்' ஏட்டின் ஐந்தாம் ஆண்டு விழாவில் எழுப்பப்பட்டவை. பெயரில்லாத கேள்விகள் பெயர் குறிப்பிட விரும்பாத தோழர்கள் எழுப்பியவை. முழுமையாகவும், விரிவாகவும் பதிலளிக்கும் நோக்கத்தோடு அவை பிரசுரிக்கப்படுகின்றன. இன்னும் சில கேள்விகள் உள்ளன. தொடர்ந்து இனிவரும் இதழ்களில் அவற்றுக்கும் பதிலளிக்கப்படும். 'கேள்வி - பதில்' பகுதி புதிய ஜனநாயகம் ஏட்டில் தொடர்ந்து வெளிவரவேண்டும் என்று வாசகர்கள் விரும்புவதோடு நாமும் அவ்வாறே முடிவு செய்துள்ளோம். எனவே தொடர்ந்து கேள்விகள் அனுப்புமாறு கோருகிறோம்.

னர். அவர்களை விட சரியான, மக்கள் திரள் புரட்சிவழி (மா-லெ) இயக்கம் பன்மடங்கு மக்கள் செல்வாக்குப் பெற்றுள்ளது என்பது தானே உண்மை!

அப்புறம், நாடு தழுவிய கம்யூனிஸ்டு கட்சி (மா-லெ) இல்லாத நிலை, உடனடி ஐக்கியத்துக்கான வாய்ப்பு இல்லாத நிலை பற்றித் தோழர் பேசுகிறார். இது உண்மைதான்! ஆனால் இந்தியா எவ்வளவு வேறுபாடுகள் நிறைந்த பெரிய நாடு; இங்கேயுள்ள மா-லெ குழுக்ககளை விட 2, 3 மடங்கு அதிக எண்ணிக்கையில், துண்டுத்துக்காணிகளாகவும், தனி நபர்களாகவும், மக்கள் செல்வாக்கு அற்றவர்களாகவும் தானே 'இன உரிமை' பேசுவோர் பல ஆண்டுகளாகச் சிதறிக் கிடக்கின்றனர். அதுவும் ஒப்பீட்டு ரீதியில் சிறியதும் ஒரே இனம் வாழக் கூடியதுமான தமிழநாட்டில்! இவர்கள் தமிழ்நாடு தழுவிய ஒரே இயக்கமாக ஐக்கியப்படுவதற்கான வாய்ப்பு மட்டும் உடனடியானதா என்ன? ஈழத்தின் அனுபவங்கள் அப்படிக் காட்டவில்லையே!

மேற்கண்டவை எல்லாவற்றையும் விட முக்கியமாக ஒன்றைச் சொல்ல வேண்டும். என்னவானாலும் தேசிய இனப் பிரச்சினை என்பது தேசிய முதலாளித்துவத்தின் முழக்கம்தானே தவிர பாட்டாளி வர்க்கத்தினுடையது அல்ல. ஒரு தேசத்துக்கோ, நாட்டுக்கோ எதிராக ஏகாதிபத்தியத்தின் 'நேரடி' ஆதிக்கம் என்று வரும்போது தான் பாட்டாளிவர்க்கக் கட்சி அந்த முழக்கத்தை முதன்மையானதாக எடுத்துக் கொள்ள முடியும். (இதுதான் மறுக்க முடியாத மார்க்சிய - லெனினிய உண்மை என்பதால், பல்வேறு தமிழ் இனவாதக் குழுக்களும் 'டெல்லி ஏகாதிபத்தியம்', 'பார்ப்பன பனியா ஆளும் வர்க்கம்' என்று கற்பனையான பல கோட்பாடுகளை உருவாக்குகிறார்கள்) அப்போதும், ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் புரட்சியின் தொடர்ச்சியாக நிலப்பிரபுத்துவ எதிர்ப்பும் உள்ளடங்கிய புதிய ஜனநாயகப் புரட்சியை பாட்டாளி வர்க்கம் தங்கு தடையின்றி முன்னெடுத்துச் செல்லும் என்பதில் தேசிய இனவாதிகளிடமிருந்து வேறுபடுகிறது.

## பஞ்சாப் பிரச்சினை...

★ *பஞ்சாப் மக்களின் நியாயமான உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள நிலையில், ''மத ரீதியிலான பிரிவினை'' என்பதை மட்டுமே காரணம் காட்டி அவர்களின் தேசிய இன விடுதலைப் போரை எதிர்ப்பது எவ்வகையில் சரி?*

● 'மத ரீதியிலான பிரிவினை' என்பது, நாம் கூறும் காரணமல்ல. 'காலிஸ்தானிகளே' பிரகடனப்படுத்தி இருப்பதுதான். அந்தப் பிரச்சினைக்காக மட்டும் சீக்கிய மதவெறி காலிஸ்தானிகளை நாம் எதிர்க்கவில்லை.

பாதல், தோரா, பர்னாலா ஆகிய சீக்கிய மிதவாதிகள் முன் வைக்கும் 'அனந்தப்பூர் சாகிப் தீர்மானம்' என்பது மாநில சுயாட்சிக் கோரிக்கை தான். இது பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமை என்ற தேசிய இனத்துக்குரிய ஜனநாயகக் கோரிக்கையை முன் வைக்காது சமரசம் செய்து கொள்கிறது.

பொது மொழி, பொது கலாச்சாரம், பொதுப் பொருளாதாரத்தை உள்ளடக்கிய பூகோள ரீதியிலான ஒரு பிரதேசத்தில் வாழும் மக்கள் ஒரு தேசிய இனமாவர். பஞ்சாபில் ஏறக்குறைய 60:40 என்ற விகிதத்தில் சீக்கிய - இந்து மதத்தினர் வாழுகின்றனர். ஆனால் சீக்கிய மதவெறியர்கள் கோரும் காலிஸ்தானம் சீக்கிய மதத்தின் அடிப்படையிலும், இந்து மத மொழியாக 'சமஸ்கிருதம்' உள்ளதைப் போன்று சீக்கிய மத மொழியான 'குருமுகி' அடிப்படையிலும் உள்ளது தானே தவிர பஞ்சாபிய தேசிய இனத்துக்கானது அல்ல! அதோடு உலகம் முழுவதுமுள்ள சீக்கியர்கள் ஒரு மத ஆதிக்கத் தலைமையின் கீழ் கொண்டுவரும் 'அனைத்து சீக்கியம்' என்ற முழக்கமும் பிற்போக்கானது.

'காலிஸ்தானம்' என்ற பிற்போக்கான கோரிக்கையையும், அரசு பயங்கர வாதத்தைப் போல மதவெறி பயங்கரவாதம் என்ற கொடிய, பாசிச முறையிலேயே அடைய முயலுகிறார்கள். அங்கே அரசுப் படைகளுக்கு எதிரான யுத்தமாக மட்டுமின்றி அனைத்து இந்துக்களுக்கும் அதைவிட மோசமாக பஞ்சாபிற்கு கூலி வேலை தேடிப் போன உ.பி., பீகார், ஒரிசா தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களையும், சீக்கிய மதச் சீர்திருத்தவாதிகளையும் குழந்தைகள், பெண்கள், வயோதிகர்களையும் படுகொலை செய்யும் மதவெறி பயங்கரவாதமாகவே உள்ளது. எனவே இதைத் தேசிய இனப் போராட்டமாகக் கருதி ஆதரிக்க முடியாது.

## மக்கள்யுத்த(போ) குழு...

★ *பாசிசத்தைப் பற்றி விளக்கி ஒரு தொடர் கட்டுரை எழுத இயலுமா?*

*சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்திலுள்ள மக்கள் யுத்தக் குழுவினர் இந்தியாவில் 'பாசிசமா? பாயாசமா?' எனக் கேட்டார்கள். அவர்களே இப்போது பாசிசம், பாசிசம் என சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி விளக்குங்கள்.*

● பாசிசம் பற்றிய கோட்பாடு ரீதியான கட்டுரை என்றால் தனி வெளியீடாகக் கொண்டுவருவது தான் சரியாக இருக்கும். அவ்வப்போதைய அரசியல், பொருளாதார ரீதியில் அதன் போக்குகள் பற்றியதைத் தொடர்ந்து பத்திரிக்கையில் எழுதுவோம்.

தமிழகத்திலேயே மக்கள் யுத்தம் (முன்னோடி), மக்கள் யுத்தம் (போல்ஷ்விக்) என இரண்டு பிரிவினர் உள்ளனர். அவர்களில் ம.யு. (முன்னோடி)யினர் இன்னமும் 'பாசிசமா? பாயாசமா?' என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தம்மீது தாக்குதல் வந்தால் மட்டும் ''பாசிசத் தாக்குதலை முறியடிப்போம்'' என்று முழங்கத் தவறுவதில்லை!

ம.யு. (போல்ஷ்விக்) குழுவினர் மட்டுமே ''பாசிச எதிர்ப்பு'' என்ற போர்த் தந்திர முழக்கத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். சரியான நிலைப்பாட்டிற்கு வருவார்களேயானால் வரவேற்கத் தானே வேண்டும்! ஆனால் ம.யு. (போல்ஷ்விக்) எடுத்துள்ள முடிவோ சந்தர்ப்பவாத அடிப்படையிலானது என்பதைச் சொலித்தான் தீர வேண்டும்! 'இந்தியாவில் பாசிசம்' என்ற கருத்து கட்சியின் அடிப்படை நிலைப்பாடுகளுக்கு மாறானது, எதிரானது, அவற்றை நிராகரிப்பது என்று கூறி முன்பு ம.யு. குழுவினர் எதிர்த்தார்கள். அதே காரணத்தைக் கூறி நமது அரசியல் கோட்பாடுகள், அரசியல் - இராணுவ யுத்தத் தந்திரங்கள், போர்த் தந்திரங்கள், அமைப்பு முறைகள் பற்றிய நிலைப்பாடுகளையும் எதிர்த்தனர்.

ஆனால் ம.யு. (போல்ஷ்விக்) குழுவினரோ இப்போது கட்சியின் அதே அடிப்படை நிலைப்பாடுகளுக்கு மாறான, எதிரான, அவற்றை நிராகரிக்கும் கலைப்புவாத - புதிய 'இடது' போக்குகளையும் சமரசப்படுத்திக் கொண்டு அமைப்பாக நீடிக்கின்றனர். 'தத்துவார்த்தப் பிரச்சினைகளில் ஜனநாயக மத்தியத்துவத்தைப் பிரயோகிக்கக் கூடாது' என்று அதற்கு விளக்கமும் நியாயமும் கற்பிக்கிறார்கள். கட்சியின் அடிப்படை நிலைப்பாடுகள் மற்றும் பிற அரசியல் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுதான் போர்த் தந்திரத்தை வகுக்க முடியும். இதுதான் மார்க்சிய - லெனினிய அணுகுமுறை - ஆய்வுமுறை. அதற்கு மாறாக, கட்சியின் அடிப்படை மற்றும் பிற அரசியல் கோட்பாட்டு நிலைப்பாடுகள் மீது முடிவற்ற உட்கட்சி விவாதம் என்ற 'திரிசங்கு' நிலையில் அவற்றை வைத்துக் கொண்டு 'பாசிச எதிர்ப்பு' என்ற போர்த் தந்திர முழக்கத்தை மட்டும் அமுல்படுத்துவதாகக் கூறுகிறார்கள். மாட்டுக்கு முன்பு வண்டியை நிறுத்திப் பூட்டும் கதைதான்! கோட்பாடற்ற ஐக்கியத்தின் மூலம் அமைப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மார்க்சிய - லெனினிய அணுகுமுறை - ஆய்வு முறையைக் காற்றில் பறக்கவிட்டு விட்டார்கள். ஆனால் ஓடுகாலிகளுடனான நமது வாதப் பிரதிவாதங்களில் அணுகுமுறை சரியில்லை என்று பிரச்சாரம் செய்கிறார்கள். ■



படிப்பகம்

www.padippakam.com



# கோர்பசேவின் முடிவு நெருங்குகிறது!

"1980 - 1989 ஆகிய பத்தாண்டுகளின் நாயகன்: ருஷ்ய அதிபர் மிகையில் கோர்பசேவ்" என்று ஏகோபித்த முறையில் கொண்டாடுகிறது ஏகாதிபத்திய உலகம். அதிகாரவெறி பிடித்த வறட்டுவாதி என்று நேற்று வரை இவர்கள் லெனினைச் சாடிவந்தார்கள். இப்போது, "லெனினுக்குப் பிறகு தோன்றிய மாபெரும் புரட்சியாளர் மிகையில் கோர்பசேவ். லெனினினுக்குப் பிறகு ருஷ்யாவில் ஆட்சிக்கு வந்திருக்கும் ஒரே படிப்பாளி - பண்பாளர் மிகையில் கோர்பசேவ்" என்று பாராட்டுகின்றனர். இங்கிலாந்தின் தாட்சர், அமெரிக்காவின் ரீகன் - புஷ்ஷுக்கு மேலே வைத்து ருஷ்ய அதிபர் கோர்பசேவை போற்றுகின்றனர். "கிழக்கு ஐரோப்பாவில் சுதந்திரம் - ஜனநாயகத்துக்கான புரட்சியைத் தூண்டிவிட்டவர் கோர்பசேவ்தான். அவர் ஆதரித்திருக்காவிட்டால் கிழக்கு ஐரோப்பாவின் மக்கள் எழுச்சியை கம்யூனிச சர்வாதிகாரிகள் அடக்கியிருப்பார்கள்" என்று கூறுகின்றனர்.

இதே போலத்தான் இவர்கள் அனைவரும் முன்பு 'சீனத் தலைவர்' டெங்சியாவோ பிங் புகழ் பாடினர். கடந்த டிசம்பர் மாத இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பில் தூக்கியெறியப்பட்ட ருமேனிய சர்வாதிகாரி நிக்கோலாய் சிசெஸ்கூவை அமெரிக்க ஏகபோக முதலாளிகளின் அரிமா சங்க உறுப்பினராக்கிக் கௌரவித்தனர்; 'நைட்-மாவீரன்' பட்டமளித்து கௌரவித்தது இங்கிலாந்து பேரரசு; 'மாண்புமிகு' பிரெஞ்சுக்காரர்கள் அவரோடு கூடிக்குலாவினர்.

ஆனால், சீனாவில் தியன்ஆன்மென் சதுக்கம் படுகொலைக்குப் பிறகு டெங் சியாவோ பிங்கைப் பழைமைவாதி என்று ஏசினர். ருமேனியாவில் திமிசௌரா படுகொலைக்குப் பிறகு சிசெஸ்கூவை ஸ்டாலினிச சர்வாதிகாரி என்று சாடினர். இந்தக் கதி தனக்கு நேராமல் மிகையில் கோர்பசேவ் தப்பி விடுவாரா?

தியன்ஆன்மென் அல்லது திமிசௌரா பாணி ஆர்ப்பாட்டம் ஒன்று மாஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் நிகழ்வதைக் கோர்ப்பசேவ் தவிர்த்து விடமுடியுமா? மீறி நிகழ்ந்தாலும் டெங் சியாவோ பிங் அல்லது சிசெஸ்கூ செய்ததைப் போல இராணுவத்தை ஏவிப் படுகொலை செய்யாமல் 'பைபிளை' ஏந்திப் பிரசங்கம் செய்வாரா?

"சந்தேகந்தான்?" என்று கேள்விக் குறி எழுப்புகிறது அதே ஏகாதிபத்திய உலகம். கோர்பசேவே எதிர்பாராத அளவுக்கு, அவரே அதிர்ச்சிக்குள்ளாக்கும் அளவுக்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் 'புரட்சி' நாலுகால் பாய்ச்சலில் முன்னே சென்றுவிட்டது. அவற்றுக்கு ஈடுகொடுத்து முன்னேற முடியாமல் கோர்பசேவ் தனது சொந்த நாட்டிலேயே திணறுகிறார்; திண்டாடுகிறார்.

- ஜனநாயக மத்தியத்துவம், கம்யூனிசக் கட்சியின் தலைமைப் பாத்திரம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகிய லெனினிசக் கோட்பாடுகளைக் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தூக்கியெறிந்து விட்டன.
- கம்யூனிசக் கட்சிகளையே கலைத்து விட்டு மேற்கிலுள்ள சமூக ஜனநாயகக் கட்சிகளைப் போல மாற்றி அமைத்துவிட்டன.
- சோசலிச நாடுகளாக இனிமேலும் இல்லை. ஜனநாயகக் குடியரசுகள் தாம்! மேற்கிலுள்ளதைப் போல பலகட்சி ஜனநாயக அரசியல் அமைப்பு முறைகளை நிறுவி விட்டோம் என்று அறிவித்து விட்டன.
- கம்யூனிசப் பொதுப் பொருளாதாரக் கூட்டமைப்பு, வார்சா இராணுவ ஒப்பந்தக் கூட்டமைப்பு ஆகியவற்றைக் கலைத்து விடும்படி ருஷ்யாவை நிர்ப்பந்திக்கின்றன. முதலாளித்துவ உலகச் சந்தையோடு இணைகின்றன. முதலாளித்துவ நாடுகளோடு இருந்த வேலிகளை அறுத்துவிட்டன; தடுப்புச் சுவர்களைத் தகர்த்துவிட்டன.

இவையெல்லாம் ஏற்று ருஷ்யாவிலும் அமுல் படுத்துகிறாரா கோர்பசேவ்?

முடியாது! அவ்வளவு வேகமாகப் போக முடியவில்லை. மூச்சு முட்டுகிறது. அவ்வளவு தூரம் போவதற்கும் அவர் சம்மதிக்கவில்லை.

இன்னமும் சோசலிசம் - கம்யூனிசம், மார்க்சிசம் லெனினிசத்தின் பெயரால் பேசுகிறார். "ஜனநாயக மத்தியத்துவத்தையும், கம்யூனிசக் கட்சியின் தலைமைப் பாத்திரத்தையும் கைவிடுவதற்கான காலம் வரவில்லை" என்கிறார். "பல கட்சி ஆட்சிமுறையை அனுமதிக்க முடியாது" என்கிறார், கோர்பசேவ்.

இப்படிச் சொலவது. இப்போது ருஷ்யா மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அடிக்கும் "மக்கள் புரட்சிப் பேரலைக்கு எதிரானது" என்கிறார்கள் மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகள். இந்தப் பேரலைக்கு எதிராக நிற்பது மட்டுமல்ல, இதன் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்தங்குபவர்கள் கூட தப்பிக்க முடியாது. பின்னால் துரத்துபவர்கள் ஏறி மிதித்துக் கொண்டு முன்னோடுவார்கள்.

அப்படித்தான் காட்டுகின்றன, சமீபத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் ஆட்சிக் கவிழ்ப்புக்கள். கிழக்கு ஜெர்மனியின் சீர்திருத்தங்களை எதிர்த்த எரிக் கோணிக்கர் மட்டுமல்ல அவற்றை ஆதரித்து அமுல்படுத்துவதாக வந்த ஈகோன் கிரென்ஜ் சில வாரங்களிலேயே தூக்கி எறியப்பட்டார். அப்புறம் வந்த ஹான்ஸ் மோத்ரோ, புதிய நாஜிக்களை ஒடுக்க இரகசிய உளவுப்படை அமைக்கப் போவதாக அறிவித்தவுடன், அவரையும் வீழ்த்தும் ஆர்ப்பாட்டங்கள் துவங்கியதும் அடிபணிந்தார். செக்கோஸ்லோவாக்யாவில் சீர்திருத்தங்களை எதிர்த்த மிலோஸ் ஜாக்கெஸ் மட்டுமல்ல; கம்யூனிசக் கட்சியின் தலைமைப் பாத்திரம் இல்லா நிலையில் அதிபரான குஸ்தாவ் ஹூசாக்கும் விரட்டியடிக்கப்பட்டார். கம்யூனிச எதிரியான குடிமக்கள் மன்றத்தின் தலைவர் வாக்லாவ் ஹாவெல் தற்காலிக அதிபராகியுள்ளார்.

சீர்திருத்தங்களைப் பெயரளவுக்குக் ஏற்றுக்கொண்டு அமுல்படுத்தாதிருந்த பல்கேரியாவின் தோடோர் ஜிவ்கோவ்வைச் சிறையில் தள்ளிவிட்டு, பீட்டர் மிலாடெனேவ் அதிபராகியுள்ளார். கிழக்கு ஐரோப்பிய ஆட்சிக் கவிழ்ப்புகளுக்கு இடைத்தரகனாக, 'நம்பத்தகுந்த கூட்டாளி' என்று ஏகாதிபத்தியங்களே ஏற்றுக்கொள்ளுமளவு இருந்தது ஹங்கேரி. அதன் 33 ஆண்டு சர்வாதிகாரி ஜனோஸ் காதாரை வீழ்த்திவிட்டு அதிபராகியுள்ளார் சீர்த்திருத்த - மிதவாதி கரோலி கிரோஜ். இவரையும் விரட்டிவிட்டு ஆட்சிக்கு வரத் துடிக்கிறார் இம்ரி போஜ்கை. ருமேனிய சர்வாதிகாரி நிக்கோலாய் சிசெஸ்க்கு எதிரான இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பில் அதிபராகியுள்ளார் ஐயோன் இலியெஸ்கூ. இவரையும் பிற தேசிய மீட்பு முன்னணித் தலைவர்களையும் பதவியை விட்டு ஓடும்படி போராட்டங்கள் நடக்கின்றன.

இப்போதைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அதிபர்கள் கூட தற்காலிகமாகத்தான் ஆட்சியில் இருக்கின்றனர். பல கட்சி ஆட்சி மற்றும் பொதுத் தேர்தல்களை நடத்தும்படியான நிர்ப்பந்தங்கள் தீவிரமாக உள்ளன. அவற்றிலே இவர்கள் அவைரும் தூக்கி எறியப்படுவார்கள் என்றே கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றனர்.

இப்படி ஆட்சிக் கவிழ்ப்புகள், அடுத்தடுத்து ஆட்சி கவிழ்ப்புகள்-என்று பேரலை வீசுகிறது. இந்த வேகத்தோடு ஈடுகொடுக்க முடியாமல் பின்தங்கும் மிகையில் கோர்பசேவின் கதி என்னவாகும் என்ற கேள்விக் குறி எழுந்துள்ளது.

"கோர்ப்சேவுக்கு இது தெரியாதா என்ன? கிளாஸ்நோஸ்ட் - ஜனநாயகப்படுத்தல் மற்றும் பிரெஸ்த்ரோய்கா - மறுசீரமைப்பு ஆகிய இரு ஆயுதங்களைக் கொண்டு இப்போது அவர் நடத்திவரும் புரட்சியில் வென்று விடுவார்" என்று கோர்பியின் ஆதரவாளர்கள் திடமாக நம்புகிறார்கள்.

ஆனால் ருஷ்யாவின் இன்றைய நிலை என்ன தெரியுமா? கிளாஸ்நோஸ்ட்டும் பிரெஸ்த்ரோய்க்காவும் கோர்பி வாக்க



படிப்பகம்




உலகிலுள்ள முன்னாள் சோசலிச நாடுகள், சோசலிச நாடுகள் என்று கூறிக் கொள்ளும் ருஷ்ய தொங்கு சதை நாடுகள் மற்றும் அவற்றின் நிறுவன ஆண்டுகள்.

ளித்தவாறு, மக்கள் எதிர்பார்த்தவாறு அற்புதங்கள் எதையும் சாதித்து விடவில்லை. ''புதிய முறைகள் வேர் பிடிக்கவும் இல்லை; பழையவை இனிமேலும் வேலை செய்யமாட்டா!'' என்ற கோர்பியே தனது சீர்த்திருத்த முயற்சிகள் தோற்றுப் போனதை ஒப்புக் கொள்கிறார்.

மறுசீரமைப்பு (பிரெஸ்த்ரோய்கா) புதிய அரசியல் பொருளாதார சுபீட்சத்தினை கொண்டு வந்துவிடவில்லை. ஜனநாயகப்படுத்தல் (கிளாஸ்நோஸ்ட்) அதன் தோல்வியைப் பறை சாற்றுவதற்கான ஆயுதமாக கோர்பசேவின் எதிரிகளிடம் சிக்கிக் கொண்டது.

இதைவிட முக்கியமாக கோர்பசேவையும் ருஷ்யாவையும் குலுக்கும் மிகப் பெரிய விவகாரமாக தேசிய இனப் பிரச்சினை வெடித்துள்ளது. ருஷ்ய ஒன்றியத்தில் இருந்து தனியே பிரிந்து போவதாக தேசிய இன குடியரசுகள் தீர்மானித்து விட்டன. ருஷ்யக் கம்யூனிசக் கட்சியில் இருந்து



படிப்பகம்

www.padippakam.com





ருஷ்யா லாட்வியா
பூசை அறையில் யேசு.
மரத்தொட்டியில் லெனின் சிலை

முறித்துக் கொள்வதாக அவற்றின் கட்சிகளும் தீர்மானித்து விட்டன. ஒன்று இராணுவம், இரகசியப் போலீசை ஏவி மீண்டும் படுகொலைகள் செய்து தேசிய இனங்களின் எழுச்சியை அடக்கி ஒடுக்க வேண்டும். அல்லது ருஷ்ய ஒன்றியமே பலபத்து குடியரசுகளாக பிளவுபட்டு சிதைந்து போவதனை ஏற்கவேண்டும். இந்த நிலைக்குத்தான் கோர்பியினே தலைமை தள்ளப்பட்டுள்ளது. இவற்றிலே எந்தப் பாதையிலே அடி எடுத்து வைத்தாலும் கோர்பியின் வீழ்ச்சி தவிர்க்க முடியாது.

கோர்ப்சேவின் தலைமைக்கு உடனடியான பெரும் சவாலாக இருப்பது ருஷ்யா முழுவதும் பொங்கி வழியும் தேசிய இன மக்களின் எழுச்சியாகும். ருஷ்ய ஒன்றியம் என்பது ஏறக்குறைய 100 தேசிய இனங்களும், தேசிய சிறுபான்மை இனங்களும் உள்ளடக்கியது. குறிப்பாக வடக்கில் பால்டிக் கடல் பிரதேசத்திலுள்ள லாட்வியா, லித்துவெனியா, மற்றும் எஸ்டோனியா; மேற்கிலும் தென்மேற்கிலும் உள்ள உக்ரைன், மோலடேவியா, பைலோரஷ்யா, ஜியார்ஜியா, அர்மேனியா, அஜெர்பைஜான்; கிழக்கிலுள்ள *கஜகஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகியன. தங்களை மொழி, கலாச்சாரம், பொருளாதாரம், அரசியல் ரீதியில் ருஷ்யர்கள் அடக்கி ஒடுக்குவதாகவும், சுதந்திரம் - ஜனநாயகம் முதல் தனிநாடுவரை பல கோரிக்கைகள் வைத்து இந்த தேசிய இனங்கள் போராடுகின்றன.

''கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் நாகோர்னி - காராபாக் பகுதி தங்களுக்குச் சேரவேண்டியது; இப்போது அது முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் அஜர்பைஜானில் உள்ளது'' என்று அர்மேனியா கிளப்பிய பிரச்சினை உள்நாட்டுப் போரின் அளவு வளர்ந்துவிட்டது. இரண்டு தேசிய இனத்தவரும் பலமுறை தாக்கிக் கொண்டு பலர் மாண்டதோடு 'செஞ்சேனை'யையும் ஏவிப் படுகொலைகள் நடத்தியது கோர்பியின் அரசு. அர்மேனியாவில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டுப் பல ஆயிரம் பேர் மாண்டபோது, நிவாரண விமானங்களை வீழ்த்தி, நிவாரணக் குழுக்களைத் தாக்கினர் அஜர்பைஜானியர்கள். அந்த அளவு பகைமை நிலவுகிறது.

பிரச்சினைக்குள்ளான பகுதியை தமது குடியரசுடன் இணைத்துவிட்டதாக அர்மேனியா தன்னிச்சையான தீர்மானம் நிறைவேற்றியதோடு, அங்கிருந்த அஜர்பைஜானிய அதிகாரிகளைக் கைது செய்து கொண்டு போனது. பதிலடி கொடுக்கும் முகமாக 43 அர்மேனியர்களைக் கடத்திக் கொண்டு போயுள்ளது அஜர்பைஜான். ருஷ்யாவின் தெற்கு - கிழக்கு குடியரசுகளில் வாழும் பெரும்பான்மையான மக்கள் முஸ்லீம்கள். எனவே அவர்கள் அண்டை முஸ்லீம் நாடுகளுடன் இதுவரை இருந்த கம்பிவேலி எல்லைகளை இப்போது தகர்த்து விட்டுள்ளனர். இதெல்லாம் அந்தக் குடியரசுகளின் சட்டவிரோத, ருஷ்ய ஒன்றியத்துக்கு எதிரான செயல்கள் என்று அறிவித்துள்ள கோர்பியின் அரசு 'செஞ்சேனை'யை ஏவிவிடப் போவதாக எச்சரித்திருக்கிறது.

ஜியார்ஜியன் தேசிய ஜனநாயகக் கட்சியின் தலைமையின் கீழ் திரண்ட பல ஆயிரம் மக்கள் இன உரிமை - சுதந்திரத்துக்காக திப்ளிசி நகரில் நிராயுதபாணிகளாகப் போராடினர். விஷவாயுக் குண்டுகளையும், குத்தீட்டிகளையும் கொண்டு ஜியார்ஜியன் மக்கள் மீது பாய்ந்தது, கோர்பியின் அரசு. திப்ளிசி நகர வீதிகளிலே பல நூறுபேர் மாண்டனர்.

லாட்வியா, லித்துவெனியா, எஸ்டோனியா ஆகிய பால்டிக் கடற் பிராந்திய தேசிய இனங்களின் ஆரம்பகால கோரிக்கைகள் மிகச் சாதாரணமானவைதான். மொழி, கலாச்சார, பொருளாதார சுயாட்சி விடுதலை கோரினர்; சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை கோரினர். இவற்றுக்காக அமைதியான ஆர்ப்பாட்டம், 'தியாகிகள்' நினைவுநாள், மனித சங்கிலி, உண்ணாவிரதம் மேற்கொண்ட மக்கள் மீது குடிபடைப் பிரிவுகளை ஏவித் தாக்கி கைது செய்தது கோர்பியின் அரசு.

கோர்பியே வானொலியில் தோன்றி அத்தேசிய இன மக்களைக் கடுமையாக எச்சரித்தார். தேசிய இன மக்களின் போராட்டச் செய்திகள், மக்கள் திரள் செய்தித் தொடர்பு சாதனங்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்டதோடு திரித்துப் பிரச்சாரம் செய்தனர். 'தேசிய இன வெறிபிடித்த பிற்போக்கு இயக்கங்கள்' என்றும் கோர்பியின் பிரெஸ்த்ரோய்க்கா, கிளாஸ்நோஸ்ட்டுக்கு எதிரிகள் என்றும் பிரச்சாரம் செய்தனர். பொருளாதார சுயாட்சி தர முடியாது கலாச்சார சுயாட்சிகள் தருவோம் என்றனர்.

ஆத்திரமுற்ற லித்துவெனியர்கள் சாஜிதீஸ் என்றும் லாட்வியர்களும் எஸ்டோனியர்களும் தேசிய முன்னணிகள் என்றும் எதிர்க்கட்சிகள் அமைத்துக் கொண்டனர். மூன்று குடியரசுகளுமே பல கட்சி ஆட்சி அமைத்து கம்யூனிசத் தலைமையை நிராகரிப்பதாக சட்டமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டன. லித்துவெனியக் குடியரசு ருஷ்ய ஒன்றியத்திலிருந்தும், லித்துவெனியக் கம்யூனிஸ்டு கட்சி ருஷ்யக் கம்யூனிசக் கட்சியிலிருந்தும் தனியே பிரிந்து போவதாகத் தீர்மானம் நிறைவேற்றிவிட்டன.

அதிர்ச்சியடைந்த கோர்பி அந்தக் குடியரசுகளுக்குத் தமது பிரதிநிதிகளை அனுப்பினார். பிறகு தானே தனது அன்றாட அரசுப் பணிகளையும் வெளிநாட்டுத் தலைவர்களின் பயணங்களையும் ரத்து செய்து

*கோர்பியின் கே.ஜி.பி.க்கு எதிராக லாட்வியர்கள் அமைத்துள்ள திஜ ஏரி.ஃபார்ம் என்ற உளவுப்படை; முன்னாள் கே.ஜி.பி. ஏஜெண்ட் தலைமையில்.*





படிப்பகம்

www.padippakam.com

விட்டு அங்கு பறந்து போனார். பிரிந்து போகும் உரிமை வரை சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் சட்டத் திருத்தம் கொண்டுவரப் போவதாக சமாதானம் கூறினார். ஆனால் பிரிந்து போய்விட வேண்டாம் என்று மன்றாடினார். ஆனால் லட்சக் கணக்கில் திரண்ட மக்கள் இந்த வாக்குறுதிகள், எச்சரிக்கைகள் அனைத்தையும் நிராகரித்துவிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தேசிய இனக் குடியரசுகளில் மட்டுமல்ல. ருஷ்யாவிலும் நிலைமை மோசமாகத் தான் இருக்கிறது. கோர்பியின் அரசு ஐந்தாண்டுகளாக அமல்படுத்திவரும் பிரெய்ஸ்திரோய்க்கா - குருச்சேவ், பிரஷ்நேவ் கும்பல் ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடியில் இருந்து ருஷ்யாவை மீட்டுவிடவில்லை. லஞ்ச ஊழல், உற்பத்தி தேக்கம், பின்னடைவு, வேலையில்லாத் திண்டாட்டம், போதை மருந்து, ஆபாசம், கிரிமினல் குற்றங்கள் ஆகிய சீரழிவுகள் அதிகரித்து வருகின்றன. அந்நியக் கடனும், விலைவாசி ஏற்றமும் தாங்க முடியாத அளவு பெருகிவிட்டது. வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறை பூதாகரமாகப் பெருத்துவிட்டது.

பிரெஸ்த்ரோய்க்கா - மறுசீரமைப்பின் படி ஆலைகளின் கட்டுப்பாடு கம்யூனிச கட்சி மற்றும் அமைச்சரவையிடமிருந்து பிடுங்கி நிர்வாகிகளிடம் நேரடியான பொறுப்பில் விடப்பட்டன. நுகர்பொருள் உற்பத்திக்கு முதலிடம் கொடுத்து, கூட்டுறவுகளிடம் விநியோக - விற்பனை ஒதுக்கப்பட்டது. உற்பத்தியும் பெருகவில்லை. நுகர் பொருட்களும் தாராளமாகக் கிடைக்கவில்லை.

கூட்டுப் பண்ணை நிலங்களை 50 ஆண்டுகள் வரை தனியாருக்குக் குத்தகைக்கு விட அனுமதிக்கப்பட்டது. ஆனால் கூட்டுப் பண்ணை அதிகாரிகளும் விட்டுக் கொடுக்கத் தயாரில்லை. தனியாரும் போதிய அளவு மூலதனமிட முன் வரவில்லை. பழைய அதிகார வர்க்கப் பிடிப்பும் தளரவில்லை. பொருளாதாரத் துறையில் கோர்பியின் சீர்திருத்தங்களுக்கு ஏற்பட்ட தோல்வியை நிரூபிக்கும் தனிப்பெரும் சம்பவம் - சான்று சைபீரியன் நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் நடத்திய வேலைநிறுத்தங்கள். அவற்றின் மூலம் சுதந்திரத் தொழிற் சங்கங்கள் வைக்கவும், வேலைநிறுத்தங்கள் நடத்தவுமான 'உரிமைகள்' உட்பட பல கோரிக்கைகளை அவர்கள் அடைந்தார்கள்.

*போராடும் சைபீரியன் சுரங்கத் தொழிலாளர்கள்*



கடந்த டிசம்பர் 2வது வாரம் கூடிய ருஷ்ய மக்கள் பிரதிநிதிகளின் 2வது காங்கிரசில் கோர்பி அரசின் பிரதமர் நிக்கோலாய் ரிஜ்கோவ் ஒரு மூன்றுகட்ட பொருளாதார சீரமைப்பு திட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார். அதன்படி படிப்படியாக சந்தைப் பொருளாதாரத்துக்குத் திரும்புவது என்று தீர்மானிக்கப்பட்டு உள்ளது. 85 - 90 சதவிகிதம் நுகர் பொருள் மற்றும் சேவைத் துறையில் முதலீடு செய்வது; 1995க்குள் பல்வேறு வடிவங்களிலான தனிச் சொத்துடைமையை சட்டபூர்வமாக்கி சந்தைப் பொருளாதாரத்தை வளர்ப்பது என்று தீர்மானம் கூறுகிறது.

ஆனால் ஆந்ராய் சக்கரோவ், போரிஸ் யேல்த்சின் ஆகிய கோர்பியின் எதிராளிகள் - தீவிர சீர்திருத்தவாதிகள் இதை ஏற்பதாய் இல்லை. ''சந்தைப் பொருளாதாரத்தைப் படிப்படியாக நுழைக்க முடியாது; திட்டமிட்ட இலக்கை வைத்து அதிகாரவர்க்க அணுகுமுறை என்ற பழைய நிர்வகிக்கப்படும் சோசலிசத்தின் தொடர்ச்சிதான் இது'' என்று சாடுகின்றனர். உலக வங்கியும் சர்வதேச நிதிநிறுவனமும் இந்த வாதத்தை ஆதரிக்கின்றன.

தனது திட்டத்தை ஏற்காவிடில் பதவி விலகுவதாக பிரதமர் நிக்கோலாய் ரிஜ்கோவ் 'மிரட்டி'த்தான் நிறைவேறச் செய்தார். இப்போதுள்ள மக்கள் பிரதிநிதிகள் காங்கிரசிலும் ருஷ்ய உச்ச நாடாளுமன்றத்திலும் கோர்பியன் ஆதரவாளர்கள் தான் பெரும்பான்மையாக உள்ளனர். அதற்குக் காரணம் அவர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல. பெரும்பான்மையின் மக்கள் திரள் அமைப்புகளினால் நியமனம் பெற்ற கம்யூனிசக் கட்சி உறுப்பினர்கள்.

பெரெஸ்த்ரோய்க்கா - மறு சீரமைப்பின் தோல்வியைக் காரணங்காட்டி - பயன்படுத்திக் கொண்டு கோர்பியின் எதிராளிகள் அமைத்துள்ள பிராந்தியங்களின் பிரதிநிதிகள் என்ற குழு அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வரும்படி நிர்ப்பந்திக்கின்றது. ''கம்யூனிசக் கட்சியின் தலைமைப் பாத்திரம், நியமன அதிகாரம் ஆகியவற்றைத் தரும் சட்டத்தை நீக்கிவிட வேண்டும்; பல கட்சி ஜனநாயக ஆட்சிமுறை கொண்டுவர வேண்டும்; அரசியல் - பொருளாதாரச் சீர்திருத்தங்களை தீவிரப்படுத்த வேண்டும்'' என்று கோருகின்றது. இதை ஆதரித்து ருஷ்யாவின் பல நகரங்களிலும் நவம்பர் 7ந்தேதி சுதந்திரப் புரட்சிப் பேரணிகள் நடத்தினர்.




''திறமை வாய்ந்த பித்தலாட்டக்காரனின் மோசடிகளை நம்பாதீர்!'' என்று கோர்பியின் எதிராளிகள் எச்சரிக்கை விடுக்கும் கருத்துப்படம்.

இந்தக் கோரிக்கைகளை ஏற்றால் கட்சியிலும் அரசிலும் தமக்குள்ள ஆதிக்கம் போய்விடும்; விரைவிலேயே வீழ்ந்து விடுவோம் என்று கோர்பியின் தலைமை அஞ்சி கடுமையாக எதிர்க்கிறது. ஆனால் அதன் எதிராளிகளின் பலம் ருஷ்யாவிலும் வெளியிலும் கூடிவருகிறது. ருஷ்யாவில் முன்பு சிறுபான்மை இடங்களுக்கு நடந்த பொதுத் தேர்தல்களிலே கூட கோர்பியின் வேட்பாளர்கள் படுதோல்விகள் அடைந்தனர். இப்போது பால்டிக் கடல் பிராந்திய தேசிய இனக் குடியரசுகள் ''பிராந்தியப் பிரதிநிதிகள் குழு''வின் கோரிக்கைகளை ஏற்று பலகட்சி ஆட்சி, கம்யூனிசக் கட்சித் தலைமை நிராகரிப்பு ஆகிய தீர்மானங்களை நிறைவேற்றி நிர்ப்பந்திக்கின்றன.

ஆகவே அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் கோர்பியின் கொள்கைகளுக்கு ஏற்பட்டுள்ள தோல்வி நெருக்கடி; ருஷ்ய ஒன்றியத்திலுள்ள தேசிய இனங்களின் எழுச்சி; ருஷ்யாவின் உள்ளேயும் வெளியேயும் உள்ள ''தீவிர சீர்திருத்தவாதி''களின் கூடிவரும் பலம் - ஆகிய மும்முனைத் தாக்குதல்களினால் மிகையில் கோர்பச்சேவின் முடிவு நெருங்குகிறது. அல்லது தோல்விகள் - தவறுகளுக்கான காரணங்களை பிறர் மீது சுமத்தியே பழக்கப்பட்டுப் போன கோர்பி தமது சக பாடிகளான துணை அதிபர் யேகோர் லிகாசேவ், பிரதமர் நிக்கோலாய் ரிஜ்கோவ் போன்றவர்கள் மீது பழி சுமத்திவிட்டுத் தப்பித்துக் கொள்ள, பதவியைத் தக்கவைத்துக் கொள்ள முயலுவார். துரோகிகளின் தலைவர் தமது சுயநலனுக்காக சகபாடிகளையே காட்டிக் கொடுத்து துரோகம் செய்வதும் வரலாற்றில் புதிதல்ல. ஆனால் வரலாற்றின் தண்டனையில் இருந்து துரோகிகள் தப்பிக்கவே முடியாது!

■ மாணிக்கவாசகம்



படிப்பகம்

www.padippakam.com

# இறால் உரிப்புத் தொழில்:
# மானத்தை உரிக்கும் அவலம்

வாழ்க்கை எவ்வளவு கொடியது! அதுவும் சாமான்யர்களுக்கு வாழ்வதே சித்திரவதையாக மாறிவிட்டது. குறிப்பாக, உழைப்பாளி பெண்கள் குடும்ப பாரத்தை சுமக்கப் படும் துன்பங்கள் வேதனை தருகிறது. விவசாயம் மற்றும் கட்டுமான வேலைகளில் கூலிகளாக மட்டுமல்ல, 'இதில் என்ன பெரிதாக கிடைத்துவிடும்' என்று எண்ணக்கூடிய பல நூறு வேலைகளில் பெண்கள் உழைக்கிறார்கள்.

இவ்வாறான ஏராளமான உதிரியான வேலைகளில் ஒன்று இறால் உரிப்பது. இறாலின் மேலிருக்கும் ஓட்டை உரிப்பது. கடலோர மீனவப் பெண்களின் உதிரி வருமானங்களில் ஒன்று. இப்போது பதப்படுத்தப்பட்ட மீன், இறைச்சிகளை 'டப்பி'களில் அடைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது கொழுத்த லாபம் தரும் தொழிலாக மாறிவிட்டது. கடலோர நகர்புறங்களிலும், பெரு நகரங்களிலும் கூட இத்தொழில் பெருத்துவிட்டது.

சாதாரணமாக இறைச்சியை கையாள்வது, குறிப்பாக, இறால் உரிப்பது போன்ற வேலைகளை எல்லோரும் செய்ய முடியாது. பெரும்பாலோர் அதற்கு முன் வருவதுமில்லை. எனவே, மீனவக் குடும்பப் பெண்களை அதிக கூலி தருவதாக ஆசை காட்டி அண்டை நகரங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் கூட கங்காணிகள் ஓட்டிச் செல்கின்றனர். அங்கு அந்த அப்பாவி மீனவப் பெண்களுக்கு இழைக்கப்படும் துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. சமீபத்தில் பத்திரிக்கையாளர்களால் அம்பலப்படுத்தப்பட்ட கேரள மீனவ குடும்ப பெண்களின் சோக கதை இது...

★ ☆ ★

பல்லனா. கேரள ஆலப்புழை நகரத்திலிருந்து 30 கி.மீ. தூரத்திலிருக்கும் திருக்கன்னபுழா பகுதியில் இருக்கும் குப்பம். மணலில் வெற்று உடம்புடன் விளையாடிக் கொண்டிருக்கும் மீனவக் குழந்தைகள்; நைந்துபோன ஏராளமான சிறுசிறு குடிசைகள்; கடலுக்குப் போன கணவனை எதிர்பார்த்த வீட்டில் முடங்கி கிடக்கும், வெளியுலகமே அதிகமாக அறியாத மீனவக் குடும்ப பெண்கள், இவர்களுக்கு ஒரு தேவ தூதனாய் வந்து சேர்ந்தான் கோபி என்ற கங்காணி. கர்நாடக மாநிலம் மங்களூரிலும், மகாராஷ்டிர மாநிலம் ரத்னகிரியிலும், இன்னும் குஜராத்திலும் உள்ள இறால் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு ஆட்களை சப்ளை செய்யும் ஆசாமி இவன்.

''இரண்டு மாதம் வேலை. மாதம் 900 ரூபாய் சம்பளம். தங்குமிடம், மருத்துவம், குளியல், சலவை, சோப்பு, துணிகள் எல்லாம் இலவசம். குளுகுளு என்று ஏ.ஸி. அறைகளில்தான் இறால் உரிக்க வேண்டும் '' என்று அந்த ஏழை குடும்பத்தவரிடம் சினிமா காட்சி போல் விவரித்தான்.

''இங்கிருந்து தனி வீடியோ பஸ்ஸில் தான் அழைத்துச் செல்வோம்; வரும் போதும் அதேமாதிரி தான்'' என்றான். அந்த அபலைகள் கற்பனையில் வேலை சூழ்நிலையை நினைத்துப் பார்த்தார்கள். சந்தோஷம் பிடிபடவில்லை. குழம்பிய கணவனிடம், தந்தையிடம் சமாதானம் சொல்லி போவதற்கு அனுமதியும் வாங்கிக் கொண்டார்கள்.

சொன்னபடியே தனி 'வீடியோ பஸ்' வந்தது. மீனவ உழைப்பாளி பெண்கள் பூரிப்புடன் குடும்பத்தவரிடம் விடை பெற்றார்கள். ஆண்கள், மகிழ்ச்சி கலந்த கலக்கத்துடன் அவர்களை வழியனுப்பி வைத்தார்கள். ஒரு மாதம் ஆகியது; தபாலும் வரவில்லை. சம்பளமும் வரவில்லை. இரண்டு மாதம் ஆகியது. தபால் மட்டும் வந்தது. சுருக்கமாக, நலமே, நலம் தானே.. என்பது மாதிரியான தந்தி வாசகங்கள் மட்டும் இருந்தது. அதன்பிறகு வந்த தபால்களிலும் அதற்கு மேல் எந்த விபரமும் இல்லை. தபால்களில் சில இடங்களில் தெரியாதது மாதிரி அடித்திருந்தது.

குடும்ப உறுப்பினர்கள் ஏதோ விபரீதம் என்று உணர்ந்தார்கள். ஆனால் அதற்கு மேல் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒருசிலர் ஒருசில தகவல்களை மட்டும் எழுதியிருந்தனர். தாங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டதாகவும், இரண்டு பெண்கள் தற்கொலைக்கு முயற்சித்து அபாய கட்டத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் எழுதியிருந்தனர்.

'நாயக் ஐஸ் அன்ட் கோல்ட் ஸ்டோரேஜ்' என்ற இந்தியாவின் மிகப்பெரும் இறைச்சி பதப்படுத்தும் நிறுவனத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர்கள் கீழ்தரமாக நடத்தப்பட்டனர். தமிழ்நாடு, கர்நாடகம், மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களில் பதப்படுத்தும் கிளைகளையுடைய இந்நிறுவனம், கேரள மீனவ அபலைகளை, கர்நாடகம், மங்களூர் கிளைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி, அங்கு கொஞ்ச நாள் வைத்திருந்து மகாராஷ்டிரம் ரத்தனகிரி கிளைக்கு மாற்றியது.

கழிவு நீர் சாக்கடை போன்ற இடத்தில் நாளொன்றுக்கு 14 மணிநேர வேலை. எப்போதும் துர்நாற்றமடித்துக் கொண்டிருக்கும், நீர் தேங்கிய சிமெண்ட் தரையில் குத்துக்கால் போட்டு வேலைசெய்ய ஆரம்பித்தால், அதே நிலையில் அப்படியே 14 மணி நேரம் உழைக்க வேண்டும். சிறுநீர் கழிக்கக்



மகாராஷ்ட்ரம் மாநிலம் இறால் உரிக்கும் கொத்தடிமை நிறுவனத்திலிருந்து மீட்கப் பட்ட கேரள கதீஜாபீவி. அருகில் கணவர் சாகுல் அமீது. 14 மணிநேரம் வேலை, 3.75 பைசா கூலி!



படிப்பகம்

www.padippakam.com



நாள் முழுக்க ஈரத்தரையில், நாறும் அறையில் இறால் உரிக்கும் பெண்கள் - சிறுமிகள். உயர்ந்த சம்பளம், வசதியான வேலை நிலைமை என்று ஏமாற்றப்பட்டு கொட்டடியில் வதைபடும் அவலங்கள்.

கூட அடிக்கடி போனால் அசிங்கமான வார்த்தைகளால் கங்காணிகள் கூச வைத்து விடுவார்கள். மடக்கிய கால்களை நீட்ட முடியாமல், இடுப்பு அறுந்து போவது மாதிரி வலியுடன் வேலையைத் தொடர்வார்கள்.

நள்ளிரவுக்கு பிறகு 2 மணிக்கு இவர்களை அடைத்து வைத்திருக்கும் கொட்டடிகளுக்கு பேருந்தைக் கொண்டுவந்து தூக்கத்திலேயே அழைத்து செல்வார்கள். அன்று மாலை 4 மணிக்கு திரும்பவும் கொட்டடியில் கொண்டுவந்து அடைப்பார்கள். ''14 மணிநேரம் தொடர்ந்து இறால்களை உரிப்பதால், விரல்கள் கண்ணிப் போய் வலிதாங்க முடியாமல் இரவில் இளம் பெண்கள் அழுவதை வேதனையுடன் சமாதானம் செய்வோம்'' என்கிறார், மீட்கப்பட்ட கதீஜா பீவி.

''விரல்கள் சீழ்பிடித்து, ஜுரம் கண்டு விடக் கூடாது என்பதற்காக, வேலையை விட்டு திரும்பும்போது, வலுக்கட்டாயமாக, உப்பு மஞ்சள் கலந்த நீரில் அமுக்கி பிடிப்பார்கள். விரல்கள் எரிச்சல் தாங்க முடியாமல், ஓய்வு நேரத்தில் கூட பல பெண்கள் தூங்கமுடியாது. அழுது கொண்டே படுத்துக் கொண்டிருப்பார்கள்'' என்று அந்த கொடூரமான இரவுகளை நினைவுகூர்கிறார்.

நாளொன்றுக்கு 3.75 பைசா கூலி. அதையும் அவர்கள் கையில் பார்த்ததில்லை. உணவு, இருப்பிடம், சோப்பு செலவு ஆகிவிட்டது என்று கணக்கு சொல்வார்கள் கங்காணிகள். நிர்வாகத்திற்கும் இவர்களுக்கும் எந்த தொடர்பும் கிடையாது. எதற்கெடுத்தாலும் கங்காணிகளிடம் தான் சொல்லவேண்டும்.

கங்காணிகள் சாராயம் குடித்துவிட்டு அருவருப்பாக பதில் சொல்லி, படுக்கைக்கு கூப்பிட்டு அசிங்கப்படுத்துவது; இரவில், தங்கியிருக்கும் இடத்திற்கு வந்து குடிபோதையில் இளம் பெண்களை பெயரிட்டு அழைப்பது, இழுத்து செல்வது பல முறை நடந்துள்ளது. சில பெண்கள் உடன்பட அவர்களிடம் குறைவான வேலை கொடுப்பார்களாம்.

ஜாஸ்மின், ஜீனத் என்ற இளம்பெண்கள் அவமானம் தாங்க முடியாமல், வேலைசெய்யும் இரண்டு மாடிக் கட்டிடத்திலிருந்து குதித்து, குற்றுயிராக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். ''எவ்வளவோ அவமானங்கள் எங்களுக்கு நிகழ்ந்தது. அதை எல்லாம் திரும்பவும் நான் ஞாபகப்படுத்த விரும்பவில்லை. அது, என் கௌரவத்தையும், தன்மானத்தையும் நானே அசிங்கப்படுத்திக் கொள்வதாக இருக்கும்'' என்கிறார், தன் குழந்தையை அணைத்தபடி கதிஜாபீவி. ''என்னிடம் பணம் பணம் மட்டும் இருந்தால், அந்த மோசடிக்காரர்கள் மீது வழக்கு தொடுப்பேன்'' என்கிறார் கதிஜா பீவியின் கணவர் சாகுல் அமீது, குமுறியபடி.

பத்திரிக்கைகள் அம்பலப்படுத்திய பிறகும் இந்த அவலம் நிற்கவில்லை. கடந்த ஜூலை மாதத்தில் அழைத்துச் செல்லப்பட்ட 50 பேர்கள் அடங்கிய ஒரு குழுவைதான், மீட்டெடுக்க முடிந்திருக்கிறது. அதுவும், அவர்களுக்கு எந்தவித நட்டஈடும் இல்லை.

கடைசியாக அவர்கள் வரும்போது கூட, 'நாயக் ஐஸ் அன்ட் கோல்டு ஸ்டோரேஜ்' நிர்வாகம் அவர்கள் அனைவரிடமும் நிர்பந்தப்படுத்தி, 'நிர்வாகம் எங்களுக்கு எந்தவிதத் தொல்லையும் கொடுக்கவில்லை' என்று கடிதம் வாங்கிக் கொண்டது.

ரத்தனகிரி போலீசு, அக்கடிதத்தைக் காட்டி புகார் கொடுக்கச் செல்பவர்களை விரட்டியடிக்கிறது. இன்னும் பல பேருடைய நிலைமை ரகசியமாகவே இருக்கிறது. வழக்கமாக, கேரள போலி கம்யூனிஸ்ட் அரசாங்கமும், மகாராஷ்டிர காங்கிரசு அரசாங்கமும், முழுமையான விசாரணைக்கு காகித உத்திரவு பிறப்பித்துவிட்டு ஒதுங்கி கொண்டன.

கேரள அரசாங்கம், தனக்கே உரிய ஏமாற்று வேலையில் இறங்கியது. தன் கட்சி சார்பாக, ஒரு பிரதிநிதியை உண்மை நிலை கண்டறிய அனுப்பியது. கே.அப்துல்லா மஜீத் என்ற அந்த நபர், வசதியாக ரத்தனகிரி போலீசு டி.எஸ்.பி. ராஜேந்திர சோனாவேனே நிர்வாகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நடத்தி அப்பழுக்கற்ற அறிக்கை கொடுத்திருக்கிறார். அந்த அறிக்கையிலிருந்து குற்றவாளிகளை யார் என்றே கண்டுபிடிக்க முடியவில்லை!


தொழிலாளர் நல சட்டங்கள் அடுக்கடுக்காக முதலாளிகளைப் பார்த்து பல்லிளிக்கின்றன. அரசால் அங்கீகரிக்கப்பட்டு, ஆண்டுக்கு பல முறை அந்நிறுவனத்துக்கு படையெடுக்கும் 'லேபர் இன்ஸ்பெக்டர்கள்' இதுநாள் வரை ஒரு புகாரும் பதிவு செய்யவில்லை. இவர்கள் தான், இனி கொடுமையை விசாரித்து அந்நிறுவனத்தை தண்டிக்கப் போகிறார்கள் என்று நம்பச் சொல்கின்றன ஓட்டுசீட்டு அரசியல் கட்சிகள்! பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் ஒரு முறை அவமானப்படுத்த போகிறார்கள்! அதிகார வர்க்க விசாரணை, நீதிமன்ற தீர்ப்புகளின் அனுபவங்கள் இதுதான்!

□ குணசேகரன்



படிப்பகம்

www.padippakam.com



# அமரர் எம்.ஜி.ஆரும் அரியணை எம்.ஜி.ஆரும்

தோற்றவர்கள் சிரிக்கிறோம். ஜெயித்தவர்கள் அழுகிறார்கள் - இதுதான் கருணாநிதியின் அரசியல் சாணக்கியம் என்று தங்கள் தானைத் தலைவனுக்கு ஒளிவட்டம் அமைக்கிறார்கள் தி.மு.க. தலைவர்கள். ஆனால் கருணாநிதி எவ்வளவு அவலட்சணமாக சிரிக்க முயல்கிறார் என்பதை பார்க்கும் போது விலா நோகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த மரண அடியால் பெயரளவிலான அ.தி.மு.க. எதிர்ப்பைக் கூட மூட்டைக் கட்டி வைத்துவிட்டார். எம்.ஜி.ஆர். பாணியில் இலவச திட்டங்களை இறைத்து நாடாளுமன்ற தேர்தலில் தூண்டிலில் போட்ட கருணாநிதி இரையுடன் தூண்டில் அறுந்து போக பதறிப் போனார். தம்மை நிராகரித்த மக்களிடம் குறிப்பாக 'தாய்குலத்'திடம் தானும் எம்.ஜி.ஆரின் பக்தன்தான் என்பதை நிரூபிக்க படாதபாடு படுகிறார்.

எம்.ஜி.ஆருடன் தமக்கிருந்த நட்பை வெளிப்படுத்த தொப்பி போடாதது தான் பாக்கி! பக்தியோடு எம்.ஜி.ஆரின் கல்லறையை வலம் வருகிறார். எம்.ஜி.ஆரின் திருஉருவம் எழுந்தருள அண்ணாசாலையில் இடத்தை ஒதுக்குகிறார். எம்.ஜி.ஆரின் உருவம் பொறித்த சிறப்பு தபால் தலையை முதல் நபராக வாங்கிக் கொள்கிறார். திராவிட வாரிசுகளை எல்லாம் தம் அணியில் சேருமாறு அ.தி.மு.க. ''வேல் திருடர்''களுக்கு எல்லாம் அழைப்பு விடுகிறார். வீட்டுவசதி வாரியத்தின் ஊழல் பெருச்சாளி, நில ஆக்கிரமிப்புத் திருடன் என்று வர்ணித்த அ.தி.மு.க. தலைவர்களை அணைத்துக் கொள்கிறார்.

திராவிட இயக்கத்தின் எதிரி, தமிழ் மண்ணின் மீது பற்று இல்லாத மலையாளி என்று எம்.ஜி.ஆரை வர்ணித்தவர், இப்போது அவரை திராவிட இயக்கத்தின் தலைவராக ஏற்றுக் கொண்டார்.

குரூர கோமாளி, சேடிஸ்ட், ஸ்திரீலோலன், (பொம்பளை பொறுக்கி) என்று படத்துடன் செய்தி வெளியிட்டு எம்.ஜி.ஆரை எதிர்த்த கருணாநிதி, அதற்காக, கோழி முட்டை கண், கத்தியுடன் எம்.ஜி.ஆரை கேலிச் சித்திரமாக் வரைந்து, அரைடவுசருடன் ஜெயலலிதாவுடன் நீச்சல் குளத்தில் நீந்தும் படங்களை போட்டு எம்.ஜி.ஆரை தோலுரித்தவர், இன்று பவ்யமாக எம்.ஜி.ஆர். சிறப்பு தபால்தலையை மேடையில் பெற்றுக் கொள்கிறார்.

எம்.ஜி.ஆரின் நினைவு தினத்தன்று அவரது கல்லறையில் கருணாநிதிக்கு மாலை போட்டு, அவருடன் இணைந்த ராகவானந்தம் குளிர்ந்து போகிறார். ''கருணாநிதி இப்ப ரொம்ப மாறியிருக்கிறார். எம்.ஜி.ஆர். மேல் நிறைய மதிப்பு வச்சிருக்கிறார். உதாரணமாக பாருங்களேன்!... இதுக்கு முன்னாடி 'முரசொலி'யில் 'புரட்சித் தலைவர்'ன்னு வந்து நீங்க பார்த்திருக்கீங்களா? இதுலேருந்து கருணாநிதிக்கு பரந்த மனசு, அவர் எவ்வளவோ மாறியிருக்கார்னு நீங்க தெரிஞ்சிக்கலாம்'' என்று புதிய எம்.ஜி.ஆர். ரசிகரைக் கண்டு உருகிப் போகிறார்.

சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு வரை ''பண மூட்டைகள்'', ''பதவி பைத்தியங்கள்'' என்று அ.தி.மு.க. தலைவர்களை வர்ணித்த தி.மு.க., நாடாளுமன்ற தோதலுக்கு முன்பு கூட, ''தி.மு.க., சத்திரமல்ல, கண்டவர்களை உள்ளே விடுவதற்கு'' என்று நெஞ்சை நிமிர்த்திய தி.மு.க. இப்போது அ.தி.மு.க. தலைவர்களை கவர்ந்திழுக்கிறது.

''தி.மு.க.வில் அ.தி.மு.க. தலைவர்கள் இணைய வேண்டுமென்றால், செயற்குழு சம்மதம் தெரிவிக்க வேண்டும். பொதுக் குழுவில் பேசித்தான் முடிவெடுப்போம்'' என்று வசனம் பேசினார் கருணாநிதி. ''காளிமுத்து, கடைசிவரை தி.மு.க. வாசலில் தவம் கிடந்தார். நாங்கள்தான் விரட்டிவிட்டோம்'' என்று கடிதத்தை காண்பித்து தி.மு.க.வின் பத்தினித் தனத்தை நிரூபித்த கருணாநிதி இன்று அ.தி.மு.க. தலைவர்களுக்கு தூதுவிட்டுக் கொண்டிருக்கிறார்.

இதன் நடுவில் ஜெயலலிதாவின் அரசியல் விலகல் நாடகமும், காங்கிரசுடன் இணையப் போகிறார் என்ற ஊகங்களும் வதந்திகளும் பரவ அதை மேலும் விரிவாக தனது எடுபிடி பத்திரிக்கைகள் மூலம் பரப்பி விடுகிறார். பெங்களூர், ஹைதராபாத் என்று ஜெயலலிதா பின்னால் ரகசிய போலீசு படையை அனுப்பி ஜெயலலிதாவை விபச்சாரி, பைத்தியக்காரி என்பதான கருத்தை ஏற்படுத்தும் கிசுகிசுக்களை தேதி, நேரம், ஓட்டல் அறை எண் உட்பட தொகுத்தளித்து நான்காம் தர அரசியல் நடத்தி ஜெயலலிதாவை அ.தி.மு.க.விலிருந்து தனிமைப்படுத்த அரசியல் அல்லாத அனைத்து முயற்சிகளிலும் இறங்கியுள்ளார்.

''லட்சிய அரசிய''லில் புடம் போட்ட தி.மு.க.வுக்கு, அரசியல் ரீதியில் அ.தி.மு.க.வை தனிமைப்படுத்தவோ, அதன் தொண்டர்களை தனது அரசியல் மேலாண்மை மூலம் வென்றெடுக்கவோ அரசியல் ஆண்மை இல்லை. தி.மு.க.வின் முனை மழுங்கிப் போன அரசியலுக்கும் தங்கள் கட்சிக்கும் அ.தி.மு.க. தொண்டர்களுக்கு வித்தியாசம் ஏதும் தெரியவில்லை. எனவே அவர்கள் தங்களுடைய விசுவாசத்தை தி.மு.க. தலைமைக்கு மாற்றிக் கொள்ள அக்கரை ஏதும் கொள்ளவில்லை.

சினிமா நடிகை ராதிகாவை முன் தள்ளி ஓட்டு வேட்டையாடும் அரசியல் ஓட்டாண்டி கருணாநிதியை விட சுயமாக மேடையேறி எம்.ஜி.ஆர். சார்பாக கருணாநிதிக்கு சவால் விடும் நடிகை ஜெயலலிதாவை அவர்கள் 'புரட்சித் தலைவி' 'ஜான்சிராணியாக' ஏற்றுக் கொள்கின்றனர். எனவே, எம்.ஜி.ஆர். எதிர்ப்பு கடைவிரித்து போணியாகாத கருணாநிதி, எம்.ஜி.ஆர். படம் மாட்டி, எம்.ஜி.ஆர். வழிபாடு செய்து புது வியாபாரத்தை பக்தியுடன் துவக்கியுள்ளார்.

தமது கட்சியின் சொந்த அரசியல், கொள்கை பேசி மக்களை வென்றெடுக்கும் வக்கற்ற அரசியல் ஓட்டாண்டித்தனம் பிராந்திய கட்சிகளுக்கு மட்டுமே உரித்தானதல்ல. காங்கிரசு எதேச்சதிகார எதிர்ப்பு, காங்கிரசு 'மாடல்' ஜனநாயக எதிர்ப்பு பேசி ஆட்சியை பிடித்த ஜனதா தளமும் அதே பாதையில்தான் நடை போடுகிறது. ஆட்சியை பிடித்த ஒரே மாதத்தில் காங்கரசு 'மாடல்' ஜனநாயக குட்டையில் மூழ்கி



படிப்பகம்

www.padippakam.com

சுகம் காண்கிறது.

தென்மாநிலங்களில் வேரோ விழுதோ இல்லாத ஜனதா தளம் தனது ஆட்சியின், கட்சியின் செயல்பாடுகளைச் சொல்லி மக்களைத் திரட்ட, அதன் மூலம் ஆட்சியையும் கட்சியையும் பலப்படுத்த வக்கற்று போனது.

அரசியலில் மலடாகி போன சிவாஜிக ணேசன் திடீரென தமிழக முன்னேற்ற முன்னணியைப் பெற்றெடுத்து அதை கொஞ்சவும் ஆளின்றி விரக்தியில் கிடந்தார். இவரைத் தான் நடு இரவில் தலைவர் என்று அறிவிப்பு செய்தது ஜனதா தளம். டெல்லியிலேயே தனது கட்சியை ஜனதா தளத்துடன் இணைத்துவிட்டு அங்கேயே தலைவர் பதவியையும் வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார் சிவாஜி.



''உங்களுக்கு டில்லியிலிருந்து வீசப்படும் தலைவர் வேண்டுமா? சுயமாக மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள் வேண்டுமா?'' என்று காங்கிரசின் உட்கட்சி சர்வாதிகாரத்தை தோலுரித்து வட மாநிலங்களில் ஓட்டு வாங்கியது, தேசிய முன்னணி. இப்போது அதே காங்கிரசு 'மாடல்' ஜனநாயகத்தை கூசாமல் பின்பற்றுகிறது.

இந்த அல்லது அந்த ஓட்டுக் கட்சிகளின் மூலம் கவர்ச்சி அரசியல், பொறுக்கி அரசியல், கிரிமினல் அரசியலுக்கு முடிவு கட்ட முடியாது. இதையே அடுத்தடுத்து வரும், புதுபுது பெயர்களில் வரும், பெயர் மாற்றிக் கொண்டுவரும், இணைந்தும், பிரிந்தும் வரும் ஓட்டு சீட்டு கட்சிகளின் ஆட்சிகள் காட்டுகின்றன.

# இடஒதுக்கீடு ஆதரவும் எதிர்ப்பும்:

## மேல்சாதியினரிடையே பதவிவேட்டைக்கான போட்டி

இடஒதுக்கீடு பிரச்சினையை மீண்டும் முன்னுக்குக் கொண்டு வந்திருக்கின்றன, சாதிச் சங்கங்களும் ஓட்டுக் கட்சிகளும். கடந்தமாதம் திருச்சியிலே கூடிய தமிழ்நாடு பிராமர் சங்கம் 'பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீடு' கோரியுள்ளது. பாசிச ஜெயலலிதா - ராஜீவ் கும்பல்களின் ஆதரவு; ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா, சங்கராச்சாரிகள் போன்ற மத வெறி சக்திகளின் ஆதாரவு; சமீபத்தில் வட மாநிலங்களில் வெடித்துப் பரவிய இடஒதுக்கீடு எதிர்ப்புக் கலவரங்கள் ஆகியன அதற்குப் புது வீரியத்தைக் கொடுத்திருக்கின்றன. அவற்றோடு ஜனதாதளத் தலைவர் சந்திரசேகர் மற்றும் ஜனதா அரசின் துணைப்பிரதமர் தேவிலால் ஆகிய 'எதிர்பாராத' தரப்பில் இருந்தும் அவர்களுக்கு ஆதரவு கிட்டியிருக்கிறது.

அதே நாட்களில், அதே நகரில் ''பார்ப்பன எதிர்ப்பு - இடஒதுக்கீடு ஆதரவு'' மாநாட்டைக் கூட்டிய திராவிடர் கழகம் - வீரமணி குழுவினர் பூணூல் அறுப்பு இயக்கத்தை மீண்டும் துவங்கும் அளவு வேகத்துடன் நடத்தியுள்ளனர். பூணூல் அறுப்பு இயக்கத்தை தஞ்சை - மன்னார்குடி என்று விரிவுபடுத்தியும் உள்ளனர். இந்தப் புதுவேகத்துக்கும் காரணங்கள் உண்டு. 'பிற்பட்ட' சாதிகளுக்கு இடஒதுக்கீடு செய்வதை வலிந்து சிபாரிசு செய்யும் மண்டல் கமிஷன் அறிக்கை; அதை அமுல் நடத்துவதாகத் தமது தேர்தல் அறிக்கையிலேயே ஒப்புக் கொண்டுள்ள 'சூத்திர' அரசுகள் மத்தியிலும் மாநிலத்திலும் அதிகாரத்தில் உள்ளன. இன்னும் சொல்வதானால் நீதிக் கட்சியைப் போன்றதொரு சாதிக் கூட்டணிதான் தேசிய முன்னணி.

ஆனால் வீரமணி குழுவினர் கனவு காண்பதைப் போல, தேசிய முன்னணி - ஜனதா தளம் வாக்குறுதி அளித்தபடி இடஒதுக்கீடு குறித்த மண்டல் கமிஷன் சிபாரிசை அவ்வளவு சுலபமாக அமுல்படுத்தி விட முடியாது; பிற மேல்சாதி இந்துக்கள் கடந்த மாதம் நடத்திய இடஒதுக்கீடு எதிர்ப்புக் கலவரங்கள் இதையே காட்டுகின்றன.

உத்திரப்பிரதேசம், அலகாபாத் பல்கலைக் கழகத்தில் ஒரு சிறுபொறியாகக் கிளம்பியது இடஒதுக்கீடு எதிர்ப்பு கலவரம். ஒரு சில நாட்களிலேயே அம்மாநிலத்தின் 62 மாவட்டங்களில் 52 ஐப் பற்றிக் கொண்டது. உடனேயே பீகார், மத்தியப்பிரதேசம், ஜம்மு காஷ்மீர், ராஜஸ்தான், ஒரிசா, மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கும் பரவி கொழுந்து விட்டு எரியத் துவங்கிவிட்டது.

அம்பேத்கார் - காந்தி சிலைகள் தகர்க்கப்பட்டன. ஊரடங்கு உத்திரவு, போலீசு தடியடி, கண்ணீர் புகை குண்டு வீச்சு, துப்பாக்கி சூடுவரை போய் பத்துப் பேருக்கு மேல் மாண்டனர்.

இடஒதுக்கீடு எதிர்ப்பு என்று கிளம்பியது விரைவிலேயே நாடுதழுவிய மிகப்பெரும் சாதிக் கலவரமாக வெடித்துப் பரவிவிடும் ஆபத்து தலைதூக்கியது. தற்காலிகமாக அது தணிந்து நீறுபூத்த நெருப்பாகியுள்ளது. ஆனால் எப்போது வேண்டுமானாலும் மீண்டும் வெடித்துப் பரவும் அபாயம் நீடிக்கவே செய்கிறது.

ஏனெனில், குறிப்பிடத் தகுந்த காரணம் எதுவுமின்றி, மண்டல் கமிஷன் அறிக்கை ஆதரவு பிற்பட்ட சாதியினருக்கு ஒரு எச்சரிக்கை என்பதாகத் துவங்கப்பட்டது தான் இந்த இடஒதுக்கு எதிர்ப்புக் கலவரம். அதுவே இவ்வளவு தீவிரமாக, வேகமாகப் பரவிவிட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கான இடஒதுக்கீட்டை மேலும் பத்தாண்டுகள் நீட்டிக்கப் போவதாக தேர்தலின் போதே ராஜீவ் வாக்குறுதியளித்தார். வி.பி. சிங் பதவியேற்றதும் அதை உறுதி செய்து, அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வந்தார். உண்மையில் இந்த இடஒதுக்கீடு என்பது நாடாளுமன்ற, சட்டமன்றப் பதவிகளுக்கானது தானே தவிர வேலை மற்றும் கல்விக்கானதே கிடையாது. இந்தப் பதவிகளுக்கான இடஒதுக்கீடுதான் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை தவணை முறையில் நீட்டித்து வருகிறார்கள் கல்வி வேலைக்கான இடஒதுக்கீடு காலவரையறையற்றது. எனவே இப்போதைய சட்டத் திருத்தத்தைத் தவறாகப் புரிந்து கொண்டதோடு இது வரை ''பிற்பட்ட'' சாதிகளுக்கான இடஒதுக்கீட்டை மட்டும் எதிர்த்து வந்த ''முற்பட்ட'' சாதியினர் இப்போது தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களுக்கான இடஒதுக்கீட்டையும் எதிர்க்கின்றனர்.

இடஒதுக்கீடு ஆதரவு - எதிர்ப்பு என்ற விவகாரத்துக்குள் தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களின் நலன்கள் எதுவும் சம்பந்தப்படவே இல்லை என்பதுதான் உண்மை. ஏனெனில் இவர்களுக்கான இட



படிப்பகம்

www.padippakam.com

ஒதுக்கீட்டை எந்தச் சாதிச் சங்கங்களும் - கட்சிகளுமே பகிரங்கமாக எதிர்க்கவில்லை; ஆதரிக்கவே செய்கின்றன. வேண்டுமென்றே தமது தரப்புக்கு பலம் சேர்த்துக் கொள்ளும் சுயநலத்தோடு முற்பட்ட, பிற்பட்ட சாதிப் பிரிவினர்கள் தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களையும் இழுத்துப் போட்டுக் கொள்கின்றனர். அதே சமயம் இவர்களில் எந்தச் சாதியினரும் தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களை உயிரோடு கொளுத்துவது வரை அடக்கி ஒடுக்கவும் சுரண்டவும் தவறுவதில்லை.

எனவே இப்போதைய இடஒதுக்கீடு ஆதரவு - எதிர்ப்பு என்ற தகராறு மேல்சாதி இந்துக்களிலேயே ஒருபிரிவான முற்பட்டவர்களுக்கும், மற்றொரு பிரிவான பிற்பட்டவர்களுக்கும் இடையிலும் பிற்பட்ட சாதிகளுக்குள்ளேயும் நடக்கும் விவகாரம்தான்! தென்மாநிலங்களைப் பொருத்தவரை ஏற்கனவே மண்டல் கமிஷன் அறிக்கையின் சிபாரிசு அமுலுக்கு வந்துவிட்டது; இங்கே நடப்பது பிற்பட்ட சாதிகளுக்குள்ளாகவே யார் பிற்பட்டவர், யார் மிகவும் பிற்பட்டவர், எவ்வளவு இடஒதுக்கீடு என்பது தான் விவகாரம். இதைத்தான் வன்னியர் சங்கம் பெரிதாகக் கிளப்புகிறது. தவிரவும் தமிழ்நாட்டில் வெள்ளாளக் கவுண்டர்கள் உட்பட 80 சதவிகிதத்தினரும், கர்நாடகாவில் லிங்காயத், வொக்கலிகா சாதியினரும் என்று ஆளும் சாதிகளே 'பிற்பட்ட'வர்களுக்குரிய இடஒதுக்கீடு சலுகைகள் பெறுகின்றனர். தென்மாநிலங்களில் உள்ள பார்ப்பனர் முதலிய மேல்சாதியினர் மண்டல் கமிஷன் அறிக்கை அமுலாவதைத் தடுக்கும் பலம் வாய்ந்தவர்களும் கிடையாது. இருந்தாலும் பிற்பட்ட சாதிகளுக்குள்ளே நடக்கும் சண்டை தகராறை மூடி மறைத்து திசை திருப்புவதற்காகவே வீரமணி கும்பல் பெருங்கூச்சல் போடுகிறது.



## தி.க.வின் சாதிவெறி!

**'பாப்பானை விரட்டுவோம்', 'பாப்பாத்தியைத் தேசிய மயமாக்குவோம்' என்ற கோஷங்களுடன் தி.க.வினர் ராமனின் பூணூலை அறுத்தனர்.**

உண்மையில் இடஒதுக்கீடு விவகாரம் தீர்க்க முடியாத சிக்கலாக உருவாகியிருப்பது வடமாநிலங்களில் அதுவும் பிற்பட்ட முற்பட்ட சாதியினரிடையே தான். மொத்தம் 3,743 சாதிப் பிரிவுகளைப் பிற்பட்ட பிரிவினராக மண்டல் கமி. ;ன் வரையறுத்துள்ளது. அவற்றிலே யாதவர் (அகிர்), குஜ்ஜார், குர்மி, ஷைலன்வார் ஆகியன வடமாநிலங்களில் பெரும்பான்மையாக உள்ள பிற்பட்ட சாதிகள். ராஜபுத்திரர்கள், ஜாட்கள், பிராமணர்கள், பூமிகார்கள், பனியாக்கள், கயாஸ்தாக்கள் ஆகியன அங்கே பெரும்பான்மையாக முற்பட்ட சாதிகள். இவர்களிலே ஜாட்கள் தவிர மற்றபிற முற்பட்ட சாதியினர்தான் அரசு பதவிகளைப் பெரும்பான்மையாகக் கைப்பற்றிக் கொண்டுள்ளவர்கள். இதுவரை கிராமப்புறத்திலும் விவசாயத்திலும் ஆதிக்கம் செலுத்தி வந்த யாதவர், குஜ்ஜார், ஷைலன்வார் மற்றும் ஜாட்டுக்கள் நவீன உற்பத்தியிலே ஈடுபட்டு பொருளாதார ரீதியிலும் முன்னேறி விட்டவர்கள்; இப்போது அரசுப் பதவிகளிலும் முற்பட்ட சாதியினருக்கும் போட்டியாக பலம் பெற முயலுகிறார்கள். இதுதான் இடஒதுக்கீடு ஆதரவும் எதிர்ப்பும் என்ற விவகாரம் முற்றுவதற்கு அடிப்படை.

இப்போது ஆட்சியைப் பிடித்துள்ள தேசிய முன்னணிக்கு தலைமையேற்கும் ஜனதா தளம் என்பதே ஜாட்டுக்கள், ராஜபுத்திரர்கள் என்ற முற்பட்ட சாதியினரின் யாதவர்கள், குஜ்ஜார்கள் என்ற பிற்பட்ட சாதியினரோடு அமைத்துக் கொண்டுள்ள சாதிக் கூட்டணிதான். இந்தி பேசும் மாநிலங்களில் பெரும்பான்மையினரான இச்சாதிக் கூட்டணி முஸ்லீம்கள் மற்றும் பிற சிறுபான்மையினரின் கணிசமான ஆதரவைப் பெறுவதன் மூலம் ஆட்சியைப் பிடித்துவிட முடியும் என்று திட்டமிட்டு உருவாக்கப்பட்டதுதான். இதை முன்பே பலமுறை எழுதியுள்ளோம்.

தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிப்பதற்காக சாதிக் கூட்டணிகள் அமைப்பதும், இடஒதுக்கீடு என்ற தூண்டில் இரையை வீசி பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை வளைத்துப் போட முயல்வதும் புதியது அல்ல. ஏற்கனவே நிறையவே சான்றுகள் உள்ளன.

திராவிடக் கட்சிகளின் தாய் கட்சியான நீதிக் கட்சியே இந்த விதத்தில் நாட்டில் முன்னோடியானது. 1985 மாநில சட்டமன்றத் தேர்தல்களில், குஜராத், மத்தியப் பிரதேசத்தில் காங்கிரசு வகுத்துக் கொண்ட தேர்தல் உத்தியும் இதுதான். சத்திரியர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், முஸ்லீம்கள் மற்றும் ஆதிவாசிகளைக் கொண்ட கூட்டணி அமைத்து இடஒதுக்கீடு எதிர்ப்பு, சாதிக் கலவரங்கள் வெடித்து பல நூறுபேர் உயிரைக் குடித்தன. தேர்தல்களில் வெற்றியைச் சாதித்துக் கொண்ட பின் சாதிக் கலவரங்களை இந்து - முஸ்லீம் கலவரங்களாகத் திசைத் திருப்பி மேலும் பல நூறு பேரைக் கொன்று முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

மத்தியிலே 40 ஆண்டுகால நேரு - இந்திரா - ராஜீவ் பரம்பரை ஆட்சியே பிராமணர், பனியா, பூமிகார், ராஜபுத்திரர், கயஸ்தாஸ் ஆகிய முற்பட்ட சாதிகளின் கூட்டணிதான். மொத்தத்தில் சிறுபான்மையினராக இச்சாதியினர் இருந்ததால் முஸ்லீம்கள், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பிற சிறுபான்மையினருக்கு சலுகைகளைக் காட்டி தேர்தல் வெற்றிகளை ஈட்டி வந்தது.

'சூத்திரர்களின் ஆட்சி' என்று வீரமணி கும்பல் சித்தரிக்கும் ஜனதா தளத்திலேயும் தலைமைத் தாங்கும் ராஜபுத்திரர்களும் (வி.பி.சிங், சந்திரசேகர்) ஜாட்டுக்களும் (தேவிலால், அஜித்சிங்) ஆட்சியைப் பிடிப்பதற்காகத்தான் பிற்பட்டவர்களின் ஆதரவு - கூட்டு வேண்டி மண்டல் கமிஷன் அறிக்கையை அமுல்படுத்துவதாக ஒப்புக் கொண்டுள்ளார்கள். ஆட்சியைப் பிடித்தாகி விட்டது. இனி தமது சொந்தச்

*உ.பி: சாலை மறியல் - கல்லெறியில் இறங்கும் மேல்சாதி வெறியர்கள்.*






படிப்பகம்

www.padippakam.com

சாதிப் பிடிப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். மண்டல் கமிஷன் அறிக்கையைக் கிடப்பில் போடுவதற்கான முகாந்திரத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இதிலே முந்திக் கொண்ட ஜாட் தலைவர் தேவிலாலும், ராஜபுத்திர (தாகூர்) தலைவர் சந்திரசேகரும் மண்டல் கமிஷன் அறிக்கையை சாராம்சத்தில் நிராகரிக்கும் நிலைப்பாடு எடுத்து விட்டனர். இடஒதுக்கீடு செய்வதற்கான தகுதிகளாக சமூக, கல்வி நிலைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது மண்டல் கமிஷன் சிபாரிசு. அதற்கு மாறாக, பொருளாதார நிலையை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்பது பார்ப்பன - பனியா, பூமிகார் முதலிய முற்பட்ட சாதியினரது கோரிக்கை. இந்தக் கோரிக்கையை இப்போது தேவிலாலும் சந்திரசேகரும் ஆதரிக்கின்றனர்.



லக்னோவில் மேல்சாதியினரின் வன்முறை வெறியாட்டம்.

ஆகவே, பார்ப்பனரல்லாத அனைவரும் 'சூத்திரர்கள் - பிற்பட்டவர்கள்' என்கிற திராவிட இயக்கத்தினரின் வரலாற்றுப் புரட்டையும், தேசிய முன்னணி அரசு 'சூத்திரர் அரசு' என்ற இன்றைய அரசியல் புரட்டையும் அம்பலப்படுத்துகிறது, இடஒதுக்கீடு பற்றிய ராஜபுத்திரர் மற்றும் ஜாட்டுக்களின் நிலைப்பாடு. இதே பிரச்சினையை எழுப்பும் வன்னிய சங்கத்துக்கும் பதில் சொல்ல முடியாமல் மழுப்புகின்றனர், திராவிட இயக்கத்தினர்.

தற்போதைய இடஒதுக்கீடு எதிர்ப்புக் கலவரங்களைத் தூண்டிவிட்டதாக காங்கிரசு, ஜனதா தளம் மற்றும் பாரதீய ஜனதா கட்சி ஆகியன ஒன்றை ஒன்று குற்றஞ்சாட்டுகின்றன. உண்மையில், இந்த மூன்று கட்சிகளையும் சேர்ந்த முற்பட்ட சாதித் தலைவர்கள் இக்கலவரங்களை உள்ளூரளவில் தலைமையேற்று நடத்தியுள்ளனர். இது பற்றிய ஆதாரங்களும் உள்ளன.

பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதிகளின் உண்மையான பிரதிநிதி என்று திராவிட இயக்கத்தினர், குறிப்பாக வீரமணி கும்பல் சான்றிதழ் வழங்கியுள்ள பகுஜன சமாஜக் கட்சியும் அதன் தலைவர் கன்ஷிராமும், ''வி.பி.சிங் திட்டமிட்டுத் தூண்டி விட்டது தான் இந்தக் கலவரங்கள். ஜனதா தளத் தேர்தல் அறிக்கையில் இட ஒதுக்கீடு பற்றி ஏராளமான வாக்குறுதிகளைத் தந்துள்ளனர். ஆனால் தமது வர்க்க, சாதி நலன்களுக்கு எதிரான அவ்வாக்குறுதிகளை நிறைவேற்ற அவர்கள் தயாராக இல்லை. எனவே இட ஒதுக்கீடு எதிர்ப்புக் கலவரங்களைத் தூண்டி விடுகின்றனர்'' என்கிறார்.

ஆனால் அடிமைச் சேவகம் புரிந்து, அடிவருடியே ஆதாயம் கண்டு வரும் திராவிட இயக்கம் இன்னமும் சூத்திரர் அரசு என்று சித்தரிக்கிறது.

இடஒதுக்கீட்டை இதுவரை அடியோடு எதிர்த்து வந்த மேல்சாதியினர், இப்போது பொருளாதார அடிப்படையை வைக்க வேண்டும் என்கின்றனர். பிற்பட்ட - தாழ்த்தப்பட்ட சாதியினரோ 2000 ஆண்டுகளாக அடக்கி ஒடுக்கி சுரண்டப்பட்ட சமூக மக்கள் முன்னேற சமூக, கல்வித் தகுதிகளைத்தான் பார்க்க வேண்டும் என்கின்றனர்.

பொருளாதாரமோ, சமூக - கல்வித் தகுதியோ எதுவானாலும், இரண்டுமேயானாலும் சாதி ரீதியில் 2000 ஆண்டுகளாகவும் இன்னமும் அடக்கி ஒடுக்கி சுரண்டப்படுபவர்கள் தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்கள் மட்டும்தான். ''பக்கத்து இலைக்குப் பாயசம் போடுங்கள்'' என்று கேட்டு ஆதாயம் அடைவதுதான் மற்ற சாதிகளின் நோக்கமாக இருக்கிறது.

அதே சமயம் இடஒதுக்கீடு மூலமாக தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களோ வேறு பிற சாதிகளின் ஒடுக்கப்பட்ட மக்களோ ஒருபோதும் முழுமையாக அடக்குமுறை, சுரண்டலில் இருந்துவிட முடியாது என்றே 40 ஆண்டு கால அனுபவங்கள் காட்டுகின்றன. ● 1987-88 புள்ளி விவரங்களின்படியே, நாட்டிலுள்ள 77 சதவிகித முற்பட்ட மற்றும் பிற்பட்ட சாதியினர் 83 சதவிகிதம் வளமான நிலத்தை உடமையாக வைத்துள்ளார். எஞ்சியவை அரசுக்குச் சொந்தம். அற்பஅளவு நிலமும், மோசமான உழுபடை கருவிகளுமே தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களிடம் உள்ளன.

● தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களிடம் படிப்பு அதிகரித்திருந்தாலும் மற்ற சாதியினரின் வளர்ச்சி வேகத்தோடு ஒப்பிடும் போது குறைந்து கொண்டே போகிறது. ஆரம்பப் பள்ளியில் நுழையும் குழந்தைகளில் பாதிப் பேர் கூட ஐந்தாம் வகுப்பை எட்டுவதில்லை; உழைக்கப் போய்விடுகின்றன.

● 37 மத்தியப் பள்ளிகளில் உள்ள 2133 பேராசிரியர்களில் 13 பேர்தான் உண்மையான சூத்திரர்கள். மொத்தம் 23% இட ஒதுக்கீடு இருந்தும் 48% தான் அரசு வேலைகளில். அதிலும் பெரும்பான்மையாக நாலாந்தர ஊழியர்களாக உள்ளனர். ● தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களில் 70% த்தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழுகின்றனர். ● இவர்களுக்கு எதிரான கிரிமினல் தாக்குதல்கள் மட்டும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. 1988-89ல் மட்டும், 18,000 ஆகும். **அரசுதான் தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களுக்கு எதிரான மிக பெரும் அளவிலான கிரிமினல் தாக்குதல்களை நடத்தியுள்ளது.**

இடஒதுக்கீடு ஆதரவும் சரி, எதிர்ப்பும் சரி தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்கள் உட்பட மற்ற சகலபிரிவு உழைக்கும் மக்களையும் அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதில் தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்களுக்குச் சேவை செய்யும் அரசு எந்திரத்தில் இடம் பிடிப்பதற்கான போட்டிதான். எந்தச் சாதியினர் இடம்பெற்றாலும், இந்த எந்திரத்தைப் புரட்சியின் மூலம் அடித்து நொறுக்கி வீசிவிட்டு உழைக்கும் மக்கள் அனைவரும் அரசியல், அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் இவர்களை அரசியல் பொருளாதாரம் மற்றும் சமூகத் துறையில் விடுவிக்கும் செயலாகும்.

அப்படிப் புரட்சிப் பாதைக்கு மக்கள் திரும்பி விடாதபடி தடுத்து, இப்போதைய அரசியல் அமைப்பிலேயே தாமும் பங்கேற்கும் உணர்வை தாழ்த்தப்பட்ட - மலைவாழ், பிற்பட்ட சாதிக்கு ஏற்படுத்துவதற்கானதுதான் என்று மண்டல் கமிஷன் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளது. ஆக, புரட்சியைத் தடுக்கவும், வந்தால் ஒடுக்கவும் அரசு எந்திரத்தில் பங்கேற்பதற்காக நடக்கும் போட்டிதான் இட ஒதுக்கீடு ஆதரவும் எதிர்ப்பும் என்பதுதான் அப்பட்டமான உண்மை!



படிப்பகம்

www.padippakam.com



*மோகன்—சீதா இளம் தம்பதியரின் 9 மாத குழந்தை ஜோவா. பீகார் ஜடுகோடா, யுரேனிய சுரங்க கதிர்வீச்சு கோரம்!*

# இன்னுமொரு கதிர்வீச்சுக் களம்!

அவர்கள் சாவுக்கு சென்று திரும்பியவர்கள். கண்களில் சோகம். மனதில் இனம்புரியாத பீதி. ''நாளைக்கு யார் பிணமோ?... ஒருவேளை நாமும் செத்து விடுவோமோ?'' — ஏறக்குறைய அந்த சுற்றுவட்டாரத்தில் இருப்பவர்கள் அனைவரும் இப்படித்தான் பீதியின் ஊடே வாழ்கிறார்கள்.

அவர்கள் கனவில் பாசக்கயிறை வீசிக் கொண்டு எருமை மாட்டின் மீதேறி எமன் வரவில்லை. மாறாக, கண்ணெதிரில் ''யுரேனியம் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் (UCIL)'' என்று பல மைல் தூரத்திற்கு பூதம் மாதிரி படுத்துக் கொண்டிருக்கிறது அந்த பிணந்தின்னி!

பீகார் மாநிலத்திலுள்ள இரும்பு எஃகு உருக்காலை நகரம் ஜாம்ஷெட்பூர், அங்கிருந்து 45 கி.மீ. தூரத்திலிருக்கிறது ஜடுகோடா — மலை குன்றுகள் அடர்ந்த வனாந்திர பிரதேசம். திட்டுதிட்டாக கிராமங்கள் வாழும் பகுதி. மலைவாசி பழங்குடிகள் அதிகமாக வாழும் இடம். நாட்டிலுள்ள பெரும்பாலான அணு உலைகளுக்குத் தேவையான எரிபொருள் யுரேனியம் இங்கிருந்துதான் வெட்டியெடுக்கப்படுகிறது.

640 மீட்டர் ஆழம் பல மைல் நீளமும் உள்ள திறந்தவெளி சுரங்கம். இங்கு வெட்டியெடுக்கப்படும் யுரேனிய கனிமம், மங்கனீசியம் டை யூரினெட்ஸ் என்ற எரிபொருளாக மாற்றப்படுகிறது. அதைப் பக்குவப்படுத்துவதற்கான, அரைவை, மாசு நீக்கல், வடித்தல், கடைசியாக கந்தக அமிலத்துடன் கலந்து பல தொடர் மாற்றங்கள் மூலம் 'மங்கனீசியம் டை யூரினெட்ஸ்' என்ற அணுஉலை எரிபொருளாக மாற்றப்படுகிறது.

இதற்காக அங்கு சுரங்கத்துடன் இணைந்த பல ராட்சத பிரிவுகள் இயங்குகின்றன. காற்று, நீர், நிலம், அனைத்தையும் நச்சுப் படுத்தக்கூடிய அபாயகரமானது அவ்வாலை. நச்சுப் பொருளை நேரே முகத்தில் உமிழ்வது போல யுரேனிய கதிர் இயக்கத் தாக்குதல் வேறு பல மைல் சுற்றளவுக்குத் தாக்குகிறது.

9 வயது சிறுமி சீமோடி. சுரங்கத்தில் பணிபுரிந்த அவளது தந்தை காச நோயால் 3 வருடங்களுக்கு முன் இறந்து போனார். 3 வயதாக இருக்கும் போது அச்சிறுமிக்கு விடாது காய்ச்சல். சில நாட்களில் அவளது வலதுகை செயலிழந்து போனது. இப்போது சிறு பொருளைக்கூட அக்கையால் தூக்க முடியாது. சிரமப்பட்டு ஒரு பொருளை எடுத்துவிட்டால் அதை மீண்டும் வைக்க முடியாது. கெட்டியாக பிடித்த மாதிரி கையிலேயே அப்பொருள் கிடக்கும். தசைகள் லகுவில் நீளவோ மடங்கவோ செய்யாது. அச்சிறுமியின் முகம் அருவருப்பாக மாறி வருகிறது. இப்போது அவளுக்கு கண்பார்வை வேறு மங்கி வருகிறது. கீழ்கண்ணால் வெட்கத்துடன் பார்க்கும் அச்சிறுமி நோய் அறியாமல், சாவதற்கு நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறாள். கிழிந்த குட்டை பாவாடையும் மேல் உடம்பில் ஒரு துண்டுடனும் காலம் கழிக்கும் அவளுக்கு விளையாட்டு என்றால் ரொம்ப ஆசையாம்!

''எக்ஸ்ரே' கூட எடுத்துப் பார்த்தோம். அவளுக்கு இந்த நோய் எதனால் வந்தது என்றே டாக்டர்கள் சொல்லவில்லை'' என்று அவளது தாய் குமுறுகிறார். ''18 ஆண்டுகாலம் சுரங்கத்தில் வேலை செய்த இவள் அப்பன் கூட இப்படித்தான். மெலிந்து உடல்நோயால் 3 ஆண்டுகள் படுக்கையில் இருந்தபடியே இறந்துபோனார்!'' என்று உடைந்து போகிறார்.

மோகன், சீதா இளம் தம்பதியர்களின் 9 மாதக் குழந்தை ஜோவா. பிறந்த 3 மாதங்களில் அக்குழந்தையின் கால்கள் இரண்டும் முடங்கி போனது. டாக்டர்கள் போலியோ நோய் கண்டிருக்கிறது என்றார்களாம்! ஆனால் ''குழந்தை பிறந்தவுடன் போலியோ தடுப்பு ஊசி நான் போட்டுவிட்டேன்!'' என்கிறார், அந்த அப்பாவி சிறு விவசாயி மோகன்.

மோகன் மஜினு 21 வயதுடைய இளைஞர். விகாரமாக மாறி முதியவர் போல் தளர்ந்து எப்போதும் படுக்கையில் கிடக்கிறார். இரண்டு மாதம்தான் சுரங்கத்தில் வேலை பார்த்தார். அடிக்கடி காய்ச்சலும், தொடர்ந்து இருமலும் வந்து அவரை உருக்கிவிட்டது. உடல் மெலிந்து கண் மங்கிப் போய்விட்டது. தோல்கள் வெடித்து உரிகிறது. ''டாக்டர்கள் ரத்தம் நஞ்சாகி வருகிறது என்கிறார்கள். என்னால் என்னவென்று விளங்கிக் கொள்ள முடியவில்லை'' என்கிறார் சோகமாக.

மோகனின் தந்தை 15 வருடங்களாக சுரங்கத்தில் வேலைக்குச் சென்று 2 ஆண்டுகளுக்கு முன் புற்று நோயால் இறந்து போனார். இரண்டு சகோதரர்கள், ஒரு தங்கை, வயதான விதவை தாய் — இவர்களுக்கு ஒரே நம்பிக்கையாக இருந்ததும் மோகன். இப்போது அவர் வருமானமும் இல்லாமல், அவருக்கு மருந்துவம் பார்க்கவும் வசதியில்லாமல், துன்பத்தில் உழல்கிறது அக்குடும்பம்.

கிராம மக்கள் புழங்கும், கால்நடைகள் தண்ணீர் குடிக்கும் அங்கிருக்கும் நீண்ட குட்டையில் யுரேனியம் நச்சுக் கழிவுகளை வெளியேற்றுகிறது. நிர்வாகம். பயிர் காலங்களில் கோதுமை வயல்களும் நஞ்சாகி விஷத்தையே மக்கள் அறுவடை செய்கின்றனர். வெயில் காலங்களில், குட்டையில் படிந்த யுரேனியம் படிவங்கள் புழுதியாகி காற்றும் நஞ்சாகிறது.

உலக சுகாதார நிறுவனம் (WHO) நடத்திய ஆய்வின்படி அவ்வாலையைச் சுற்றிய நீர்நிலைகளில் யுரேனிய நச்சு, அபாய கட்டத்துக்கு மேல் அதிகமாகக் கலந்துள்ளது என நிரூபிக்கப் பட்டுள்ளது. தொழிற்சாலைக்குள்ளே யுரேனிய கனிமத்தை வெட்டியெடுக்கும் தொழிலாளிகளுக்கு அத்தியாவசியமான முக கவசம், கையுறையும் தரப்படுவதில்லை.

அந்நிறுவனத்தின் கணக்கு புத்தகங்களின்படியே, '85ஆம் ஆண்டில், 1500 தொழிலாளிகளுக்கு 437 முக கவசம்தான் இருப்பு காண்பிக்கப்பட்டு உள்ளது. இவை



படிப்பகம்

www.padippakam.com

அனைத்தையும் எதிர்த்துப் போராடிய, 'யுரேனியம் காம்கார் யூனியன்', 'யுரேனியம் மஸ்தூர் சங்கம்' இரண்டுக்கும நிர்வாகம் அங்கீகாரம் அளிக்கவில்லை.

நிர்வாகத்தின் கைத்தடியாக இயங்கும் காங்கிரசு ஐ.என்.டி.யு.சி. சங்கத் தலைவரும், ஆலையின் கொள்முதல் பிரிவு (கமிஷன் அடிப்பதற்கு வசதியான இடம்) ஊழியருமான சர்மா தன் திமிரை இப்படி வழிய விடுகிறார். '' என்னை பார்! நான் நலமாகத்தான் இருக்கிறேன்! மொடாக் குடிகாரர்களுக்கு எல்லாம் (பாதிக்கப்பட்டவர்கள்) ஏதாவது வரத்தான் செய்யும். இங்கு நச்சும் இல்லை. அபாயமும் இல்லை'' என்று பத்திரிக்கையாளர்களிடம் தன் தொப்பையைத் தட்டி காண்பிக்கிறார். அந்நகர கார்ப்பரேஷன் நிர்வாகமோ 'பயப்படுவதற்கு ஒன்றுமே இல்லை' என்று நிர்வாகத்திற்கு துணை போகிறது.

ஆலையின் சட்டப்படி அனைத்தும் ரகசியம், ''தடை செய்யப்பட்ட பகுதி'' என்று உண்மைகளை அறிய சமூக சேவை - பத்திரிக்கையாளர்களைக் கூட உள்ளே விட மறுக்கிறது. நிர்வாகத்தின் வளர்ப்பு பிராணிகளாக இருக்கும் மருத்துவர்கள், கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களை ''பொதுவான நோய்'' கண்டிருப்பவர்களாக பட்டியலிடுகின்றனர். இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் கோரவோ, நீதி கேட்கவோ முடியாதபடி செய்கின்றனர்.

இதை விட மோசம் என்னவென்றால், இன்னொரு போபால் விஷவாயு விபத்தை தன்னுள் கருக்கொண்டுள்ளது, இதே அணுசக்தித் துறையின் இன்னொரு எரிபொருள் பிரிவான அணு எரிபொருள் தயாரிப்புக் கழகம் (NFC). ஆந்திரா, ஹைதராபாத்திலிருந்து 25 கி.மீ. தூரத்தில் மௌலலியில் அமைந்துள்ளது. 150 ஏக்கர்பரப்பில் விரிந்துக் கிடக்கும் இப்பிரிவு, சுற்றுப்புற மக்களைக் கொன்று குவிக்க திறந்த வெளி மரணக் கிடங்காக வாய் பிளந்து நிற்கிறது. உலகிலேயே அணுவைப் பிளக்கப் பயன்படும் எரிசக்தி மற்றும் எரிபொருளாக வினையாற்றும் பாகங்களும் ஒரே இடத்தில் தயாரிக்கும் ஒரே ஆலை! அதன் பாதுகாப்பும் அப்படித்தான்! உலகிலேயே எங்கும் இல்லாதவாறு சுண்ணாம்பு கால்வாய் போன்று பராமரிக்கப்படுகிறது!

மேற்கூறிய ஜாம்ஷெட்பூர் அருகிலுள்ள யுரேனியம் ஆலையால், என்னென்ன நோய்கள் மக்களுக்கு வருகிறதோ, அத்தனையும் இங்குள்ள மக்களுக்கும் வருகிறது. இன்னும் விசித்திரமான கண்டறியப்படாத நோய்கள் எல்லாம் வருகிறது. நாளொன்றுக்கு 4 மணிநேரமே விழித்திருக்கும் நோயாளிகள் மற்ற நேரம் எல்லாம் 'கோமா' நோய் கண்டவர்கள் மாதிரி தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். உரு சிதைந்த தலையோடு கோரமாக பிறக்கும் குழந்தைகள், கைகால்கள் கோரமாக ஒரு பகுதி நீளமாகவும், ஒரு பகுதி குட்டையாகவும், வளரும் குழந்தைகள்.... இப்படி எண்ணிலடங்காத நோய்கள்.

அவ்வாலையை நிர்மாணிப்பதற்காக அங்கிருந்து ஆலையின் புறத்தே குடியமர்த்தப்பட்ட அசோக்நகர் கூலி ஏழைகள் குடும்பங்கள்தான் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன.

நாளொன்றுக்கு 50,000 லிட்டர் நச்சுக் கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன. இவையாவும் ஆலையைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்ட பல புதிய குட்டைகளில் தேக்கப்படுகின்றன. ''சூரிய வெப்ப நீராவிக் குட்டைகள்'' என்று, செலவு இல்லாமலேயே காற்றில் கழிவுகளாக வெளியேற்றப்படுகின்றன. இதனால் சுற்று வட்டார, நிலத்தடி நீர் அனைத்தும் நஞ்சாகின்றன.

ஏற்கனவே, 12 கிராமங்களின் ஆழ்குழாய் கிணறுகள் மூடப்பட்டு விட்டன. அப்படியும் தேங்கிய நீர்நிலைகளில் இருக்கும் நீரைக் குடிக்கும் கால்நடைகள் சமீப ஆண்டுகளாக அதிகமாக சாகின்றன. காப்ரா முனிசிபல் எல்லைக்குள் இருக்கும் கிணற்று நீர் குடிநீருக்கு லாயக்கற்றது என்று அறிவிக்கப்பட்டு, குடிநீர் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

இன்னும் கொடூரமாக, அவ்வாலை நிர்வாகம், திடநிலையில் உள்ள கழிவுகளை, 'டெக்கான் நைட்ரேட் பிரைவேட் லிமிடெட்' என்ற உரத் தொழிற்சாலைக்கு கச்சாப் பொருளாக விற்று விடுகிறது. அவை, உரத் தொழிற்சாலையைச் சுற்றி மலை போல் குவிக்கப்பட்டு, இன்னும் ஏராளமான இடங்களுக்கு நோய்கள் பரவுகிறது. தோல் வியாதி, மூச்சு இழுப்பு, பார்வை இழப்பு என அடுத்த பகுதிகளுக்கும் நோய் பரவுகிறது. இங்கும் அதிகார வர்க்கம் அனைத்து உண்மைகளையும் அடியோடு மறுக்கிறது. திரும்ப திரும்ப, ''பாதுகாப்பு ஏற்பாடுகள் போதுமான அளவு செய்துவிட்டோம்'' ''அனுமதிக்கப்பட்ட (!) அளவுக்கும் குறைவாகத்தான், கதிரியக்க வீச்சும், நச்சு அபாயமும் இருக்கிறது'' என்று சாதிக்கிறது.

*திறந்தவெளி குப்பை மேடாக இருக்கும், ஆந்திரா அசோக்நகர் அணு எரிசக்தி ஆலைக் கழிவுகள், படுகொலை பிரதேசம்!*



அணுஉலை எரிசக்தி தயாரிப்பதாக கூறி பீகார், ஆந்திராவில் யுரேனியம் ஆலைகளை நிறுவி, அப்பகுதியையே படுகொலைப் பிரதேசமாக, பொட்டல்காடாக மாற்றிவரும், இந்திய அரசின் கொலைவெறிக்கு இவை சாட்சியங்கள்! இனியும் நாம் தாமதிப்பது நாமே நம் குழந்தைகளின் கழுத்தை நெறித்துக் கொல்லுவதற்கு சமம். பக்கத்தில் படுத்திருந்தவர் படுகொலை செய்யப்பட்ட பிறகும் நமக்கு ஒன்றும் நேராது என்று தூங்குவது அறிவீனம் ஆகும்.

எனவே, உடனடியாக கூடங்குளம் உட்பட, தாராப்பூர், ராஜஸ்தான், கல்பாக்கம் ஆகிய ரஷ்ய, அமெரிக்க, கனடா, பிரான்சு கொலைவெறியர்களின், கொலைக்களத்தை இழுத்து மூடச்சொல்லி போராடுவோம்! மக்களுக்கு பாதிப்பில்லாத, செலவு குறைவான, மாற்றுவழியில் அனல், நீர், சூரியஒளி, காற்று இவற்றின் மூலம் மின்சக்தியை தயாரிக்க கோரி இந்திய அரசை நிர்ப்பந்திப்போம்! பாதிக்கப்பட்டவர்களை மட்டுமல்ல, கைகட்டி மௌனமாக இருப்பவர்களையும் பார்த்துதான் கொலைகாரர்கள் சவால்விட்டு நக்கல் செய்கிறார்கள். கொலைகாரர்களின் தாக்குதலை விட நமது மௌனம்தான் அதிக இழப்புகளை ஏற்படுத்தும்.

□ பச்சையப்பன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
அச்சிடுபவர்: எம்.கே.சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094.

padippakam

www.padippakam.com






# இதுதான் இன்றைய இந்தியா

அலங்கரிக்கப்பட்ட அரசு ஜீப்பில் ஒட்டுக்கட்சி தலைவர்கள் பாணியில் பவனி வருபவர், மகாராஷ்டிர மாநிலம் போலீசு டி.ஜி.பி. ராமகாந்த் குல்கர்னி. கடந்த டிசம்பர் மாதம் 29ந் தேதி அவர் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு இந்த விமரிசையான பிரிவு உபச்சார விழா! டி.எஸ்.பி. பதவிக்கு குறையாத மூஞ்சிகள் எல்லாம், மின்சார பல்பு மாதிரி பிரகாசிப்பதைப் பாருங்கள். அடிமைகள் மாதிரி அடிவருடும் வேலை செய்வதில் அவ்வளவு சந்தோஷம்.

பதவியில் இருக்கும் வரை போலீசுகாரன்கள் அதிகாரியின் வளர்ப்புப் பிராணியாகவே மாறிவிடுகின்றனர். மக்களின் வரிப்பணத்தில் சம்பளத்தை வாங்கிக் கொண்டு போலீசு அதிகாரியின் பிள்ளைகளை பள்ளிக்கு அழைத்து செல்வது முதல், அதிகாரியின் அந்தரங்க நாயகிக்கு, காய்கறி, துணி துவைத்து கொடுப்பது முதல் பக்குவமாக செய்கின்றனர். தன்மானத்தை ஊதிர்த்துவிட்டு அதிகாரிகளின் ஏக வசனத்திற்கும் பல்லிளித்து ஊழியம் செய்கின்றனர். பிரதிபலனாக திருட்டு வவுச்சர் போடுவது, கூடுதலாக லஞ்சம் வாங்குவது, சக போலீசுகாரனையே மிரட்டுவது என்று சிவன் கழுத்துப் பாம்பாக ஆட்டம் போடுகின்றனர்.

இதோ இவர்கள், டில்லியில் அதே டிசம்பர் மாதம் போராடிய தொழுநோயாளிகள். ஷுதாத்மா சவுக் பகுதியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய இவர்களை டில்லி போலீசு கீழ்த்தரமாக கொச்சைப்படுத்தி ஊர்வலத்தைக் கலைத்து தன் அதிகாரத்தைக் காட்டியது. அவர்கள் எடுத்துச் சென்ற அமைப்பு பேனரைப் பறித்து கிழித்தெறிந்தது. மருத்துவம், நிரந்தர குடிநீர் வ'சதி போன்ற அடிப்படைத் தேவைகளைக் கோரியவர்கள் இப்படி அவமானப்படுத்தப்பட்டனர்.

ஊனமுற்றவர்களை, அவர்களுடைய கோரிக்கைகளுக்குக் கூட திரளவிடாமல் 'வீரம்' காட்டும், அடிவருடி போலீசுக் கும்பலின் கொட்டத்தை நாம் அடக்குவது எப்போது?



படிப்பகம்